
# அருள்மிகு ஏழுமலையான் அற்புதங்கள்

## ஸ்ரீ வெங்கடேஸ்வர விரதம்



லலிதா ருஷிகேஷ்




Rushikesh Neyhaa Lalitha




September 5, 2010



September 7, 2010



September 12, 2010



September 12, 2010

**ஓம் நமோ வெங்கடேசாய நம:**

# அருள்மிகு ஏழுமலையான் அற்புதங்கள்

**அமெரிக்காவில் கலிபோர்னியா மாகாணத்தில் ஒரு தெலுங்கு குடும்பத்து அனுபவங்களின் ஒரு தொகுப்பு**

# ஸ்ரீ வெங்கடேஸ்வர விரதம்



## இந்த நூலை இணையிறக்கம் செய்ய:

**www.lordbalajimiracles.com/download**

**Tamil translation, by the following devotees of Lord Venkateswara**

Deepak Kumar Vasudevan of Irving, Texas U.S.A
Vivek Chandrahasan, Ananthavalli Chandrahasan & Family of Southern California U.S.A
Ganasaraswathy (Ganam) & Family of Southern California U.S.A.

*Thanks to Karthik from Hyderabad, India for editing this book.*

**Lalitha Rushikesh**

**Trabuco Canyon, California - 92679 - U.S.A**

**Email:** info@lordbalajimiracles.com
**Website:** www.lordbalajimiracles.com
www.facebook.com/lordbalajimiracles
www.facebook.com/lalitharushikesh
**Phone:** (001) 949-459-3679

# அருள்மிகு ஏழுமலையான் அற்புதங்கள் மற்றும் ஸ்ரீ வெங்கடேஸ்வர விரதம்

முதல் பதிப்பு: ஆகஸ்ட், 2011

## உள்ளுரை

ஓம் நமோ வெங்கடேசாய நம: ..... 5
நானும் ஏழுமலையானும்.... ..... 7
அருள்மிகு ஸ்ரீ வெங்கடேஸ்வர மந்திரம் ..... 15
விரதத்திற்கு தேவையான பொருட்கள் ..... 16
விரத நைவேத்தியம் செய்முறை ..... 16
விரத வழிமுறைகள் ..... 16
ஸ்ரீ வெங்கடேஸ்வர விரதம் ..... 18
விரதம் திருக்கதை :1 ..... 36
விரதம் திருக்கதை :2 ..... 38
விரதம் திருக்கதை :3 ..... 41
விரதம் திருக்கதை :4 ..... 43
விரதம் திருக்கதை :5 ..... 46

**Picture of Sree Kalyana Venkateswara Swamy is on the last page or back cover of this book.**

# ஓம் நமோ வெங்கடேசாய நம:

**வெங்கடாத்ரி சமம் ஸ்தானம் பிரஹ்மாண்டே நாஸ்தி கிஞ்சனா**
**வெங்கடேச சமோ தேவோ ந பூதோ ந பவிஷ்யதி**

(இந்த பிரபஞ்சத்தில் ஏழு மலைகளுக்கு ஈடான மலை ஏதும் இல்லை. திருவேங்கடமுடையானுக்குச் சமமான இறைவனும் இல்லை, இனியும் இருக்க இயலாது.) இந்த கலியுகத்தில், ஏழுமலையான் ஸ்ரீநிவாசனின் பரிபூரண கிருபா கடாக்ஷத்தைப் பெறுவதற்கான ஒரு எளிய, மற்றும் அருமையான மார்க்கம் ஸ்ரீ வெங்கடேஸ்வர விரதம். அந்த வேங்கட நாதனின் மகிமைகளையும் மற்றும் லீலா வினோதங்களையும் நான் செவி கொடுத்துக் கேட்கும் ஒரு பெரும் பாக்கியம் கிடைத்தது மட்டுமின்றி, அந்த வேங்கட நாதனின் சக்திபெருமைகளை, மேலும் அறிந்து கொள்ள துடிக்கும் புத்துணர்வே என் வாழ்வின் நோக்கமாகக் கொள்கிறேன்.

எல்லையில்லா கருணாமூர்த்தி! நம் தடைகள் எல்லாவற்றையும் தகர்த்து, நம்மை சம்சார சாகர சூழல்களில் சிக்காது வழி காட்டி, கேட்டதைக் கொடுத்து அருளும் கொடை வள்ளல் அவன்! தன்னை நம்பி அபயம் என்று வரும் ஜீவனுக்கு ஆதரவு தரும் அன்பு தெய்வம்.

எனது பெற்றோர் ( ஸ்ரீ புர்லே புல்லா ராவ் மற்றும் திருமதி புர்லே வெங்கட லஷ்மி) மூலம் ஏழுமலையானின் கிருபா கடாக்ஷங்களைப் பற்றி நான் அறிந்து கொண்டுள்ளேன். திருமலை தெய்வம் மீது ஒரு அளவு கடந்த அதீத பற்றினையும், ஆழ்ந்த பக்தியுணர்வையும் அவர்கள் எனக்குத் தந்தருளினர்.

எனக்கும் திருமலை தெய்வம் ஸ்ரீநிவாசனுக்கும் இடையில் இருந்த பிணைப்பு நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமாக பெருகியது. நான் அறிந்த மட்டில் அவனிடத்தில் ‘இது வேண்டும்’ என்றோ ‘இதை செய்து கொடு’ என்றோ நான் கேட்டதாக ஒரு நினைவும் இல்லை. எனது தேவைகளை அவன் அறிவான், நிச்சியம் அதை நிறைவேற்றித் தருவான் என்னும் முழுநம்பிக்கை எனக்குண்டு. எனது சுக துக்கங்களில், அவன் அணுவினுக்குள் அணுவாய் இருந்து, நிச்சியம் என்னைப் பேணிக் காப்பான் என்ற முழுநம்பிக்கை என் உள்ளத்தில் ஆணித்தனமாக இருந்து வருகிறது.

இந்த கால கட்டத்தில், இறைவனிடம் வைக்க வேண்டிய நம்பிக்கையை விட்டுவிட்டு, மனிதர்கள் இந்த அழியும் உலகில், பல அற்ப பற்றுக்கள் மீதும் ஆசைகொண்டு, அதற்கே முக்கியத்துவம் தருகிறார்கள். இறைவனை வழிபடும் போதும் பல வித ‘பண்ட மாற்று’ வணிக முறையில் வழிபாடு நடைபெறுகிறது. தூய உள்ளத்துடன் பற்றற்ற முறையில் நாம் இறைவனை நோக்கினால், அவனது திவ்ய தரிசனம் நிச்சியம் கிட்டும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

எனது வாழ்வில் ஸ்ரீநிவாசன் நிகழ்த்திய சில அற்புதங்களை இங்கு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். எந்த குடும்பத்தில் பெற்றோர்கள், அவர்களுடைய புத்திரர் புத்திரிகள், பேரக்குழந்தைகள், மருமக்கள், மற்றும் சம்பந்திகள் யாவரும், அன்புடன் ஒன்றுகூடி, ஒரே குடும்பமாக சுற்றத்தாருக்கும், நட்புக்கும் விட்டுக் கொடுத்து ஒற்றுமையாக வாழ்வர்களேயானால், அவர்களது வீட்டில் எல்லாம் அந்த ஏழுமலையில் குடிகொண்ட ஸ்ரீநிவாசன், நேரில் வந்து காட்சிக் கொடுத்து, நிச்சியம் அருள் புரிவான். அப்படிப்பட்ட ஸாத்வீகக் குடும்பத்தில் நிச்சியம் லக்ஷ்மி கடாக்ஷம் கிடைக்கும்.

ஒவ்வொருவருக்கும் பலவித ஆசைகளும், அவாக்களும் இருக்கும். இது உலக நியதி. ஆனால், நமது விருப்பங்கள் மற்றவர்களுக்குத் தீங்கு நினைப்பதாக இருத்தல் கூடாது. எப்போதும் தூய உள்ளத்துடன் நேர்மையோடு, அனைவருக்கும் எவன் ஒருவன் நன்மையைச் செய்கின்றானோ, அவன் உள்ளத்தில் அந்த கோவிந்தன் பரிபூரணக் கிருபா கடாக்ஷம் கிட்டும் என்பது நிச்சியம். அதுமட்டுமன்றி அந்த கோவிந்தனின் முழுமையான பாதுகாப்பு வளையத்தில் அவன் பாதுகாக்கப்படுவான் என்பது திண்ணம்.

எல்லோருக்கும் பொதுவாகவும் மற்றும் எளிதாகவும் இருக்கும் வகையில் இந்நூலில் பூஜை முறை விளக்கப்பட்டுள்ளது சிறப்பம்சமாகும். பூஜை சம்மந்தப்பட்ட புத்தகங்களை வெளியிடுவது என்பது நிச்சயமாக லாபநோக்கமற்ற, சேவை மனப்பான்மையுடன் கூடிய ஒரு செயலாகும். எல்லோரும் இந்நூலை வாங்கி, ஸ்ரீ வெங்கடேஸ்வர விரதத்தை அனுசரித்து அந்த வேங்கடநாதனின் பரிபூர்ண அனுக்ரஹத்துடன் வாழ்வில் ஐஸ்வர்யங்கள் கொழித்து, சிறப்புற்று விளங்க வேண்டும் என்ற பெரிய நோக்கத்துடன் இந்நூலை இறைவனின் திருவடியில் சமர்ப்பிக்கிறோம்.

# நானும் ஏழுமலையானும்....

எனது பெற்றோர் திரு. புர்லே புல்லா ராவும், திருமதி. புர்லே வெங்கட லட்சுமியும் திருமலைவாசனிடம் பேரன்பும் பக்தியும் மிக்கவர்கள். பல முறை திருமலைக்கு நடைப்பயணம் மேற்கொள்ளும் பாக்கியம் அடைந்தவர்கள்.
திருமலையானைப் பரிபூர்ண முழுமுதற் கடவுளாக எண்ணி வாழ்ந்து வந்த **என்** தந்தைக்கு அருமை மகளாக, 1980 ஆம் ஆண்டு கம்மம் என்னும் சிற்றூரில், எனது பாட்டனார் திரு. அனந்தராமுலு பாட்டியார் திருமதி. கோடி ரத்னம் அவர்களது திருமாளிகையில் பிறந்தேன். 2000 ஆம் ஆண்டு, நான் பணி நிமித்தம் காரணமாக ஐதராபாத் சென்று விடுதியில் தங்கினேன். ஒரு நாள் இரவு, எனது கனவில் பிரகாசமான ஒருபெரும் ஒளி ஒன்று தோன்றியது. அந்த பிரகாசத்தில் எனக்கு வேறெதுவும் தெரியவில்லை.

அந்த பிரகாசத்தினூடே அசரீரியாக "ஸ்ரீ வெங்கடேஸ்வர விரதத்தை நீ உடன் தொடங்க வேண்டும்" என்ற தெய்வீக குரலின் உத்தரவும் கிடைத்தது. நான் கண் திறந்து பார்க்கையில் சுற்று முற்றும் கும்மிருட்டாய் இருந்தது. மறுபடியும் நித்திரையில் ஆழ்ந்து விட்டேன்.

அடுத்த தினம் அமீர்பெட், மற்றும் பல இடங்களில் உள்ள பல புரோகிதர்களையும், வேத விற்பன்னர்களையும் தொடர்பு கொண்டு விசாரிக்க, எவருக்கும் ஸ்ரீ வெங்கடேஸ்வர விரதம் பற்றி ஒன்றும் தெரியவில்லை. காலப் போக்கில் இந்த கனவு எனது நினைவிலிருந்து, படிப்படியாய் மறையத் தொடங்கியதுவருடா வருடம் திருமலைக்கு நடந்து சென்று ., அங்கப் பிரதக்ஷிணம் செய்யும் வழக்கம் உள்ளவள் நான்அப்படி இருந்தும் இந்த கனவு அறவே என் . .நினைவிலிருந்து மறைந்து விட்டது 2002 ஆம் ஆண்டு, திரு ருஷிகேசினைக் கைபிடித்து எனது. இல்லறத்தினை அமெரிக்கா நாட்டில் கலிபோர்னியா மாகாணத்தில் தொடங்கினேன் . திருமலையானின் பேரருளால் 2003 ஆம் ஆண்டு நேஹா என்ற மகள் பிறந்தாள், 2005 ஆம் ஆண்டு இந்தியாவிற்குச் சென்ற போது, திருமலை யாத்திரையை மேற்கொண்டோம் .வழக்கம் போல அங்கப் பிரதக்ஷிணம் செய்ய முடிவு செய்தேன். நாங்கள் தங்கியிருந்த குடில், கோவிலிலிருந்து வெகு தொலைவில் இருந்தது. விடியற்காலை எழுந்து, டாக்சிக்காகக் காத்திருக்கும் போது, குதிரை வண்டி ஓட்டும் முதியவர் ஒருவர் , என் முன் வந்து நின்றார். கோவிலைச் சென்று அடைய இன்னும் பத்து நிமிடங்களே இருந்ததால், "குதிரை வண்டியில் சென்றால் நேரமாகி விடும்," என்று அவரிடம் கூறினேன். அதற்கு அவர், தகுந்த நேரத்தில் ஆலயத்தில் என்னைக் கொண்டு சேர்த்து விடுவதாக உறுதி அளித்துப் புன்முறுவல் செய்தார். ஆலயத்தை அடைந்தவுடன் அந்த முதியவர் ஒரு பெண்ணிடம் என்னை அறிமுகப் படுத்தினார். இன்றும், அந்த பெண்மணியின் பிரகாசமானக் கருணை முகத்தை என்னால் நினைவுகொள்ள முடிகிறது. மஞ்சள் பூசிய முகத்தில் சிவப்பு வட்டப்பொட்டு! பளிச்சென்று மின்னல் ஒளிவீசும் இரண்டு மூக்குத்திகள் அலங்கரிக்கும் மூக்கு! வாசனைப் பூக்கள் அலங்கரிக்கும் தலைமுடி! அப்பப்பா என்னே தரிசனம் திவ்ய பெண்ணின் அந்த

அந்த பெண் பெரிய குங்குமத்துடன் அன்னை பத்மாவதியைப் போலக் காட்சி அளித்தாள் . மேலும் அந்த பெண் ,என் தலையைப் பிடித்து அமுக்கி, அருகிலிருந்த கேணி ஒன்றில் மூன்று முறை மூழ்கச் செய்தார். அதன் பிறகு என் முகத்தில் மஞ்சள், குங்குமம் இட்டு, சூரிய பகவானை நமஸ்கரிக்கும்படி சொன்னார். என் அங்கப் பிரதக்ஷிணத்தை முடித்ததும் ஆலய சிறப்பு வாசல் வழி திவஜஸ்தம்பம் கடந்து,

ஏழுமலையானை வழிபடுவதற்கான சிறப்பு அனுமதியைப் பெற்றுத் தந்தார்.

தரிசனம் முடிந்ததும் அந்த பெண்மணிக்கு நன்றி கூற ,நான் அவரைத் தேடிய போது, எங்கும் அவரைக் காணவில்லை .உடனே ,அந்த முதியவர் இறக்கி விட்ட இடத்தில் நான் சென்று விசாரித்த போது என்னைத் திக்குமுக்காட வைத்த மற்றுமொரு அதிர்ச்சி என்னவென்றால், திருமலையில் குதிரை வண்டிகளே இல்லை என்பது தான் . மேலும், அங்கு வாழும் மக்கள் ஒருபொழுதும் எந்தவித குதிரை வண்டிகளையும் தாங்கள் திருமலையில் பார்த்ததில்லை என்று சொன்னார்கள். டாக்சிக்காக நான் கொண்டுவந்த பணம், இன்னும் என் கையிலே இருந்தது. கேணி ஒன்றில் என் சிரசினை ப்றோக்ஷணம் செய்து முடித்த பின்னரும், அந்த பணம் தண்ணீரில் நனையாமல் இருந்தது மிகவும் ஆச்சரியமாக இருந்தது. இந்த நிகழ்ச்சியைக் கண்டதும், அந்த ஏழுமலையானின் திருவிளையாடலை என்னால் நன்கு உணர முடிந்தது.

என்னே !அவன் திருவிளையாட்டு !அந்த ஏழுமலையானே, ஒரு குதிரை ஓட்டும் வயோதிகர் உருவத்தில் வந்து, என்னைக் கோவிலுக்கு அழைத்துச் சென்று, பத்மாவதித்தாயார் உருவத்தில் வந்து , என்னை அரவணைத்து உதவிகள் பல செய்து, பகவானை நேரடியாக தரிசிக்க வைத்ததை, நான் ஏன் முன்னரே புரிந்துகொள்ள வில்லை என்று மிக வருந்தினேன்மேலும் . அந்த பத்மாவதித் தாயார் , " என் பகவானின் தரிசனத்தை நிச்சியம் நீ காண்பாய்", என்று உறுதி மொழி சொன்ன வரிகளை நினைவு படுத்திப் பார்க்கும் பொழுது, எல்லையில்லா மகிழ்ச்சி அடைந்தேன். அந்த ஏழுமலையானின் அற்புதங்களைக் கண்டு மெய்சிலிர்த்து, உள்ளம் பூரித்தேன். இதனை எனது கணவர் மற்றும் அண்ணாமன்னியிடம் - போது கூறிய, அனைவரிடத்திலும் மெய்சிலிர்க்கும் பக்தி பொங்கிப் வழிவதை நான் உணர்ந்தேன்.
2005 ஆம் ஆண்டு நான் மீண்டும் கலிபோர்னியா திரும்பிய பிறகு, 2000ஆம் ஆண்டின் கனவு, மீண்டும் 2010ஆம் ஆண்டு வந்தது. அது மட்டுமல்ல. "நீ எனது அற்புதங்களை அனைவரும் அறிய பரப்ப வேண்டும், என்ற கனிவான உத்தரவும் இட்டது. நான் இங்கு இருந்த சூழ்நிலையில், எனக்கிட்ட பணியை எப்படி நான் செய்வேன் என்று திருமலையப்பனிடம் வேண்டிய போது அவரும், "உனக்கிட்ட பணியை , உனது இல்லத்தில், எளிதான முறையில் தொடங்கு . நாள்கள் செல்லச் செல்ல, மேலும் பல தகவல்கள் உன்னை வந்து சேரும்" என்று தெம்பு கொடுத்து ஆறுதல் அளித்தார். இறைவனின் உத்தரவுக்கிணங்க இந்த நூலினையும் நான் உடனே எழுதத் தொடங்கினேன். எனது கணவரிடமும் இந்த கனவினைப் பற்றிக் கூறினேன். அவரும் இதற்கு ஒப்புக் கொண்டார்.

**ஜூன் 26, 2010:** சனிக்கிழமை, பௌர்ணமி தினம் அன்று, நாங்கள் ஸ்ரீ வெங்கடேஸ்வர விரதம் நடத்தினோம். அதற்கு அடுத்து **ஜூலை** 25, 2010 ஞாயிறு, பௌர்ணமி அன்று, அடுத்த விரதம் நடத்தினோம். மஹா நைவேத்தியமாக, அகத்தில் செய்த பட்சணங்கள், பழம்-புஷ்பம் வகையறாக்கள் பூஜை அறையில் வைத்து விட்டு அறைக் கதவினைத் தாழிட்டோம். ஒரு அரை மணி நேரம் கழித்து பூஜை அறைக்குச் சென்று பார்த்தோம். ஒரு கவளம் அளவு எலுமிச்சைச் சாதம் ஸ்ரீ கல்யாண வெங்கடேஸ்வரர் படமருகே இருந்தது. அந்நிகழ்ச்சி எங்களை வியப்பில் ஆழ்த்தியது.

**செப்டெம்பர் 4, 2010:** அன்று, மஹா நைவேத்தியம் ஒரு உருண்டையாக மாறி காட்சி அளித்தது. இது ஒரு நிறைந்த ஏகாதசி திருநாள் என்பது குறிப்பிடத் தக்கது. அன்று முதல் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக திருமலையானின் தெய்வீகத் திருவிளையாடல்களும்,
அற்புதங்களும் எனது இல்லத்தில் அரங்கேறத் தொடங்கின. ஆனால் இந்நூலில் **செப்டெம்பர் 5, 2010** முதல் **அக்டோபர் 5,2010** அன்று முடிய நடந்த திருவிளையாடல்கள் மட்டுமே இடம்பெற்றுள்ளன.

**செப்டெம்பர் 5, 2010:** காலை கண் விழித்த போது ஒரு பெரிய திருமண் திரு நாமம் எனது முகத்தில் இருந்தது. காலையில் பூஜையை முடித்ததும், நாங்கள் வெளியில் சென்று விட்டோம். மாலை வீடு திரும்பிய போது பூஜை அறையில் ஆரத்தித்தட்டும், மற்றும் விளக்குகளில் நெய்யும் நிரப்பப்பட்டு, ஆரத்திக்குத் தயாராக இருந்தது. இந்நிகழ்ச்சி எங்களுக்கு ஆச்சரியமாகவும், அதே சமயம் பயமாகவும் இருந்தது. ஆனால், "கலியுக வரதன் ஏழுமலையான் எங்கள் இல்லத்தில் இருக்கின்றார்", என்ற ஒரு தனிப்பெரும் மகிழ்ச்சி எங்களுக்கு ஏற்பட்டது.

சிறிது நேரம் கழித்து, நான் சமையல் செய்து கொண்டிருக்கும் போது, நறுமணப்புகை வீடு முழுவதும் பரவியது. உடனே நாங்கள் விரைவாகச் சென்று பூஜை அறையைப் பார்த்தோம். என்னே அதிசயம்! பூஜை அறையில் நறுமண சந்தன ஊதுபத்திகள் ஏற்றப் பட்டிருந்தன. சில நிமிடங்கள் கழித்து, நெய்விளக்குகள் திரி போடப்பட்டு ஏற்றத் தயாராக இருக்கின்றன என்று என் மகள் கூறினாள். எங்கள் உள்ளங்கள் பயத்தினால் நடுங்கியது. அப்பொழுது எங்கள் வீட்டில் ஒருவரும் இல்லை. இதைச் செய்தவர்கள் யார், இது எப்படி நடந்தது என்று யோசித்த பொழுது, இவை யாவும் அந்த கலியுக வரதனின் திருவிளையாடல்களே என்று உணர்ந்தோம். மகிழ்ச்சிப் பொங்கிப் பெருக்கெடுக்க, அந்த பெருமாளுக்கு ஆரத்தி எடுத்தோம். மேலும், பகவான் "என் வீட்டிற்கு வந்தவர் அந்த ஏழுமலையானே", என்று என் கனவில் சொன்ன போது, மகிழ்ச்சிக் கடலில் நீந்தித் தத்தளித்தேன். நாங்கள் அடைந்த ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை.

**செப்டெம்பர் 6, 2010:** எங்கள் படுக்கை அறையில் இருந்த படுக்கையில் அக்ஷதைகள் கிடந்தன. அவற்றினைப் பத்திரமாக சேகரித்து கொண்டு பூஜை அறைக்குச் சென்று பார்க்க, அங்கு திருமலையப்பனின் படத்திலிருந்து பிரகாசமான ஒரு ஒளி தோன்றியது. நான் கண் மூடி தியானம் செய்து கொண்டிருந்த போது எனது கணவர் என்னை உரத்த குரலில் அழைத்தார். அவர் என்னிடம் "இறைவன் உன் மீது வந்துள்ளார், குரல் உனது ஆண் குரலாக மாறியது."என்று கூறினார் ", அதேசமயம் எனது நெற்றியில் பெரிய திருமண் திருநாமம் மூக்கு வரை இருந்ததைக் கண்ணாடியில் பார்த்த பொழுது மிகப் பயமாக இருந்தது. எனது முன்நெற்றியில் சுயமாக வந்த திருநாம திருமண்ணில் நல்ல ஒருபெரும் சிவப்பு குங்குமம் காணப்பட்டது. இங்கு நடப்பது எல்லாம் உண்மையா என்று என் கணவரிடம் கேட்டேன். அன்றைய தினம், எனக்கு ஸ்ரீ வெங்கடேஸ்வர விரதம் பற்றியோ, மற்றும் அங்கு நடந்த அற்புதங்களோ, ஒன்றும் நினைவிற்கு வரவில்லை. அன்று மதியம் ஒரு மணிபோல் நாங்கள் வெளியே சென்றோம். மாலை ஆறு மணிக்கு வீட்டுக்கு வந்து பார்த்தால், எங்கும் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. ஊதுபத்திகள், மற்றும் நெய்விளக்குகள் திரி போடப்பட்டு பூஜைக்குத் தயாராக இருந்தன, தீர்த்தமும் ( பால்+சர்க்கரை ) தயாராக இருந்தது.

**செப்டெம்பர் 7, 2010**: இத்தினத்தில் இறைவன் திருப்படத்திலிருந்து மஞ்சள் தூள் உதிரத் தொடங்கியது. காலையில் நாங்கள் பூஜை செய்த பொழுது இறைவன் திருப்படத்தில் மஞ்சள் ஒன்றும் காணப்படவில்லை. நானும் என் மகளும் மதியம் 12.30 மணிக்குப் பூஜை அறையைச் சுத்தம் செய்யச் சென்றோம். அப்போது என் மகள், இறைவன் திருப்படத்திலிருந்து மஞ்சள் உதிர்வதாகக் கூறினாள். அதைக் கண்ட நான், வீட்டில் உள்ள மஞ்சளாக இருக்குமோ என்று எண்ணினேன். உண்மை என்னவென்றால் நாங்கள் அந்த படத்தில் மஞ்சள் இடவே இல்லை. கொட்டிய அளவு மஞ்சள் தூளும் எங்கள் இல்லத்தில் அப்போது இல்லை. சமையல் அறையில் மஞ்சள் வைத்த கிண்ணத்தைப் பார்த்த போது ஓம் மற்றும் ஸ்வஸ்திக் சின்னங்கள் அதில் பொறிக்கப்பட்டுத் தெரிந்தன. இறைவன் திருப்படத்திலிருந்து வெளிவந்த மஞ்சளின் நறுமணம் எங்கள் வீடு முழுவதும் பரவியது. வீட்டிற்கு வந்திருந்த நண்பர்களும் இதையே உணர்ந்தார்கள். அன்று மாலை அதே நேரத்தில் வழக்கம் போல,ஆரத்திக்குத் தேவையான பொருட்கள் (நெய்/திரி) அனைத்தும் தயாராக இருந்தன.

**செப்டெம்பர் 8, 2010** : மஞ்சள் தூளின் அளவு இன்னும் அதிகரிக்கத் தொடங்கியது . தேனும், குளிர்ந்த பாலும் ஒரு சிறிய வெள்ளிக் கிண்ணியில் இருந்ததுஇந்த அதிசயங்கள் அமுது நடக்கத் தொடங்கியது முதல் எங்கள் இல்லத்தில் இறைவனுக்கு மூன்று காலமும் படைக்கத்தொடங்கினோம். அவனுக்கு அமுது படைக்காது நானும ., நேஹாவும் எதுவும் உண்பதில்லை .

**செப்டெம்பர் 9, 2010 :** மஞ்சள் தூளின் அளவு மேலும் அதிகரித்து இறைவன் முகத்தினை ஒரு சிறு குன்று போல அப்பிக் கொண்டது. அந்த குன்றில் லட்சுமி நரசிம்ஹ ஸ்வாமியின் உருவம் இருப்பதைக் கண்டோம். எங்கள் நண்பர்களை அழைத்துக் காண்பித்தோம். சிலருக்கு அது கிருஷ்ணராகவும், ஒருசிலருக்கு அது ஓம்கார உருவாகவும் தெரிந்தது. இது எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தார் போல ஒரு அதிசயம் இன்று நடந்தது. எனது முகத்தில் மஞ்சள் நிறைய அப்பியிருந்தது மட்டுமல்ல ஒரு ரூபாய் அளவு பெரிய குங்குமமும் இருந்தது. என் நெற்றியில், அந்த குங்குமம் வளர்ந்து கொண்டே இருந்தது. எங்கள் வீட்டிற்கு அருகில் இருந்த நண்பர்கள் இதைக் கண்டதும், தங்கள் குடும்பத்துடன் எங்கள் வீட்டிற்கு வந்து, பஜனைகள் நடத்தினர். எனது மனதில் தோன்றிய செய்தி, “மஞ்சளும் குங்குமமும் தோன்றிய காரணம், நமது மானுட கண்களுக்கு இறைவனைக் காணும் சக்தி இல்லை” என்பதே. அதற்கு பிறகு சர்க்கரைக் கலந்த பாலினை இறைவனுக்கு நைவேத்தியம் செய்தோம். அது தேனாக மாறி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது.

**செப்டெம்பர் 10, 2010 :** ஸ்நானம் செய்த பிறகு பூஜை அறை சென்று பார்த்தால் மஞ்சளில் விநாயகர் உருவம் தெரிந்தது,எங்கள் நண்பர்கள் .அன்று வினாயக சதுர்த்தி . இறைவன் விநாயகர் உருவத்தில் வந்திருப்பதாக கூறினர் .இன்றும் நெய் விளக்குகள் தானே எரிந்தன . ஊதுபத்திகள் மற்றும் திரிகள் ஆரத்திக்குத் தயாராக இருந்தன .

**செப்டெம்பர் 11, 2010 :** இன்றும் விளக்குகள் தானே எரிந்தனஆரத்தித் தட்டில் விளக்கும் . திரியும் தயாராகஇருந்தன,காலைக் கண் விழித்தவுடன் எனது முகம் முழுவதும் மஞ்சளும் . பெரிய வடிவில் குங்குமப் பொட்டும் காட்சியளித்தனமீண்டும் இந்த தெய்வீக நிகழ் .ச்சி மனதுக்கு நிறைவு தரும் வண்ணம் இருந்தது,இறைவனுக்கு எலுமிச்சை சாதமும் . தயிர் சாதமும் வைத்திருந்தோம் சிறிது நேரம் .கழித்து அவை கலந்து காணப்பட்டன .

வந்திருந்த விருந்தினர்களில் ஒரு பெண் மட்டும் இந்த அற்புதங்களை நம்பாது பல கேள்விக் கணைகளைத் தொடுத்துக் கொண்டிருந்தாள். அவற்றிற்கு நானும் பொறுமையாக பதில் சொல்லிக் கொண்டிருந்தேன். அவள் கொடுத்த மலர்களையும் நான் இறைவனிடம் வைத்து விட்டேன். அந்த பெண்மணியைத் தவிர, மற்ற அனைவரும் பிரசாதம் பெற்றுச் சென்றனர். சில மணிநேரம் கழித்து அந்த பெண்மணி தொலைபேசியில் என்னை அழைத்து "பாலாஜி / பத்மா என்னும் தம்பதியர் எனது வீட்டு முகவரி வேண்டும்" என்று கேட்டதாகச் சொன்னாள். நானும் அப்பெண்மணியிடம் "ஆம்! அவர்களும் வந்தனர். என் பூஜை அறையைக் கண்ட அவர்கள் என்னிடம், உனக்கு ஏழுமலையானின் கிருபா கடாக்ஷம் பரிபூரணமாக உள்ளது", என்று சொன்னதைக் கூறினேன்.

மாலையில் எனது கணவரிடம் சொன்ன போதும், மற்ற நண்பர்களிடம் பேசிக் கொண்டிருந்த போதும், நாங்கள் தெரிந்து கொண்டது "பாலாஜி / பத்மா என்னும் பெயர் கொண்ட தம்பதிகள் ஒருவரும் எங்கள் சுற்று வட்டாரத்தில் இல்லை" என்பதே. வந்தது சாக்ஷாத் ஏழுமலையானும் பத்மாவதி தாயாரும் என்று உணர்ந்து நாங்கள் அனைவரும் மெய்சிலிர்த்தோம்.

இரவு 11 மணிக்குப் படுக்கைக்குச் செல்வதற்கு முன், இறைவனுக்கு நமஸ்காரம் செய்ய பூஜை அறைக்குச் சென்ற பொழுது, அங்கு இறைவன், இறைவித் திருப்படங்களிலிருந்து தேன் வழிவதைக் கண்டோம். இந்த தெய்வீகக் காட்சியை எங்கள் அண்ணா-மன்னியிடமும் இணைய ஸ்கைப் மூலம் காட்டினோம். இன்னுமொரு காட்சி - "நம்பிக்கை இன்றி கொடுத்த அந்த பெண்ணின் மலர்கள் வெளியே வீசப்பட்டு இருந்தன."

இதிலிருந்து நாங்கள் கற்ற பாடம் "முழு நம்பிக்கையோடு பக்தர்கள், நண்பர்கள் கொண்டு வரும் மலர்களை மட்டுமே இறைவனிடம் சமர்ப்பணம் செய்ய வேண்டும்" என்பது தான். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அவன் செய்யும் தெய்வீகத் திருவிளையாடல்கள் எங்களை மெய்மறக்கச் செய்து வருகின்றன.

**செப்டெம்பர் 12, 2010 :** இன்று படத்திலிருந்து குங்குமம் உதிர்ந்து சந்தனத்தோடு கலந்து கொண்டிருந்தன. தேன் இன்னும் வழிந்து கொண்டிருந்தது. மதியம் நாங்கள் நைவேத்யம் பண்ணிய உணவு எதுவும் மாறாமல் அப்படியே இருந்தது. மாலை நாங்கள் நைவேத்யத்திற்காக வைத்த சாதம் அனைத்தும், லட்டு உருண்டைகளாகக் காணப்பட்டன . அவற்றினை நாங்கள் வந்திருந்த பக்தர்களுக்கு அளித்தோம்.

**செப்டெம்பர் 13, 2010 :** காலை இறைவனுக்கு உலர் பழங்களை அளித்தோம். அவற்றில் பாதி எங்களுக்குக் கிடைத்தன. இன்றும் ஆரத்திக்குத் திரிகள் தயாராக இருந்தன. எனது மகளைப் பள்ளிக்கு அனுப்பி விட்டு, என் வீட்டு வேலைகளை முடித்து விட்டு, மதியம் எனது கணவருடன் தொலைபேசியில் பேசும் போது, பூஜை அறையிலிருந்து கொலுசு சத்தம் கேட்டது. எனது கணவருக்கு இது கேட்கவில்லை. ஸ்கைப் மூலம் எங்களது உறவினர்களுக்குக் காட்டினேன். இறைவியின் நாட்டிய ஒலி கேட்க மிக இதமாக இருந்தது. மாலையில் எனது மகளுக்கும், இரவு எனது கணவருக்கும் இந்த கொலுசு இன்னிசையைக் கேட்கும் பாக்கியம் கிடைத்தது.

**செப்டெம்பர் 14, 2010 :** விக்ரகத்திலிருந்து இன்னும் தேன் ஒழுகிக் கொண்டிருந்தது. அவற்றினைத் தீர்த்தமாக வந்தவர்களுக்கு வழங்கினோம்.

**செப்டெம்பர் 15, 2010 :** இன்று இறைவன் முன்பு இன்னும் நிறைய குங்குமம் காணப் பெற்றது. வெள்ளிக் கிண்ணியில் தேன் நிரம்பிவிட்டதால் இன்னொரு கிண்ணியும் வைத்தோம்.

**செப்டெம்பர் 16, 2010 :** இன்று நைவேத்தியத்தில் ஆப்பிள் ஒன்று வைத்தோம். சிலமணி நேரத்தில், அந்த ஆப்பிள் கடிக்கப்பட்டிருந்தது.

**செப்டெம்பர் 18, 2010 :** மஞ்சளும் குங்குமும் இறைவன் முகத்தினை மறைக்காது பரவி விட்டிருந்தது. திருமுகமும் மகுடமும் இன்னும் பிரகாசமாகத் தெரிந்தது. குங்குமத்தினையும் சந்தனத்தையும் வந்தவர்களுக்கு நாங்கள் கொடுத்துக் கொண்டிருந்தோம். விக்ரகங்களிலிருந்து தேன் இன்னும் வழிந்து கொண்டிருந்தது. குறைந்தது ஒரு பத்து நிமிஷத்திற்கு , தேன் வழிவு மிக வேகமாக இருந்தது.

மதியம் இறைவனுக்கு உப்புமா நைவேத்யம் செய்தோம். பின்னர் நாங்கள் வரவேற்பறையில் தொலைக்காட்சியை ரசித்துக்கொண்டிருந்தோம். ஒரு பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு உப்புமாவின் ஒரு சிறு துளி எனது வாயில் இருந்தது. பூஜை அறை சென்று பார்த்த பிறகு அங்கு உப்புமாவும் குறைந்து இருந்தது. (18ஆம் படத்தினைக் காணவும்)

**செப்டெம்பர் 19, 2010 :** இன்று இறைவனுக்கு ஓர் ஆப்பிள் கொடுத்தோம். சமையல் அறையில் நான் இருந்த போது ஆப்பிளின் ஒரு துண்டு எனது வாயினில் வந்தது. பூஜை அறைக்குச் சென்று பார்த்த போது அங்கு கடிப்பட்ட ஆப்பிள் காணப்பட்டது. மாலை பழச் சாறு இறைவனுக்குக் கொடுத்தோம். சிறிது நேரம் கழித்து பார்த்த போது அது குறைந்து காணப்பட்டது. இறைவன் எமது படையலை ஏற்றுக் கொண்ட திருப்தியில் மீதமிருந்த பழச் சாறினை நாங்கள் உட்கொண்டோம். இறைவன் விக்ரகத்திலிருந்து இன்னும் தேன் வழிந்து கொண்டிருந்தது.

**செப்டெம்பர் 20, 2010 :** இன்று இறைவனுக்கு அளித்த நைவேத்தியம் சாதம் மற்றும் கோவைக்காய். சிறிது நேரம் கழித்துப் போய் பார்க்க, சாதமும் கோவைக்காயும் நான்கு லட்டுகள் போல காட்சி அளித்தன. மாலை சிறிது ரொட்டியும் கொண்டைக்கடலை மசாலாவும் நைவேத்தியம் செய்தோம். இறைவன் எமது படையலை ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாக அவை குறைந்து காணப்பட்டன. தேனோட்டம் இன்னும் காணப்பட்டது.

**செப்டெம்பர் 21, 2010 :** இன்று இறைவனுக்கு அளித்த அமுது சாதமும், கீரையும். சிறிது நேரம் கழித்து பார்த்த போது சாதமும் கீரையும் கலந்து காணப்பட்டன. ஆரத்தித் தட்டினில் நெய்யும் திரியும் தயாராக இருந்தன. இறைவன் முன்பிருந்த சிறிய பாத்திரத்தில் பாலும் தேனும் தானாக வந்தன. கலியுக வரதன் திருமலையப்பன் நம்மிடையே இருப்பதை, இந் நிகழ்வுகள் உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

**செப்டெம்பர் 22, 2010 :** இன்று காலை சாதமும், பீன்ஸ் பொரியலும் நைவேத்தியம் செய்தோம். சிறிது நேரம் கழித்து அவை கலந்தும் குறைந்தும் காணப்பட்டன. மேலும் மாலை நாங்கள் வழங்கிய திராட்சைகள் சில எனது வாயிலும் காணப்பட்டன. பூஜை அறையில் இரண்டு திராட்சைகள் மட்டுமே பாத்திரத்தில் இருந்தன.

**செப்டெம்பர் 23, 2010 :** இன்றும் இறைவனுக்குத் திராட்சைகள் நைவேத்தியம் செய்தோம். சிறிது நேரம் கழித்து சில திராட்சைகள் எனது வாயிலும் காணப்பட்டன. அன்று எனது கணவரின் நண்பர்கள் சிலர் வீட்டிற்கு வந்திருந்தனர். அவர்கள் அனைவரும் வருவதற்கு முன், தேன் அமிர்தம் வெள்ளமாய் பெருகியது . விளக்கொன்றில் பாதி கொளுந்திய திரி ஒன்று தானாக விளக்கேற்றிக் கொண்ட அனுபவம் கண்டு அனைவரும் மகிழ்ந்தனர்.

**செப்டெம்பர் 24, 2010 :** இன்று காலை இறைவனுக்காக வைக்கப்பட்டிருந்த நைவேத்தியம் ஒன்றும் தொடப் படவில்லை. அன்று மாலை உலர் திராட்சைகளைப் பூஜை அறையில் வைத்து விட்டு நாங்கள் வெளியில் சென்று விட்டோம். இல்லத்திலிருந்து ஐந்து கிலோமீட்டர் தொலைவில் நாங்கள் இருந்த போது, பூஜை அறையில் வைத்த உலர் திராட்சைகள் சில எனது வாயில் தெரிந்தன. இது வரை வீட்டினுள் மட்டும் நிகழ்ந்த அற்புதங்கள் , இப்போது வெளியிலும் நிகழத் தொடங்கின.

**செப்டெம்பர் 25, 2010 :** இன்று பூஜை அறையில் ஆரத்திக்குத் தேவையான நெய்யும், திரியும் தயாராக இருந்தன. தேனும் பாலும் வெள்ளிக் கிண்ணியில் தானாக தெரிந்தன. **செப்டெம்பர் 4, 2010** அன்று நாங்கள் வெள்ளிக் கிண்ணியில் குழைத்து வைத்த சந்தனம் இன்னும் ஈரம் உலராமல் இருந்தது. எனது கழுத்துப் பட்டையில் அந்த சந்தனத்தைக் கொண்டு நாமக் கீற்றுக்கள் போடப்பட்டிருந்தன.

பூஜையை எனது கணவரும் மகளும் செய்தனர். பூஜைக்குப் பிறகு அவர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர். நான் சமையல் வேலை செய்து கொண்டிருந்த பொழுது , திடீரென்று சந்தன ஊதுபத்தி தானாக ஏற்றிக் கொண்டது. இல்லம் முழுவதும் சந்தன வாசனை அடித்தது. மாலையில் பூஜை ஆரத்திக்குத் தேவையான நெய்யும், திரியும் தயாராக இருந்தன. ஆனால் திராட்சைகள் தொடப்பட வில்லை. வெள்ளிக் கிண்ணியில் குழைத்து வைத்த சந்தனம் இன்னும் ஈரம் குறையாமல் வழிந்து கொண்டு இருந்தது.

**செப்டெம்பர் 26, 2010 :** அன்று காலை, மதியம் அளித்த நைவேத்தியம் தொடாமல் இருந்தது. மாலை அளித்த பழங்கள், நாங்கள் நான்கு கிலோ மீட்டர் தூரம் உள்ள கடைக்குச் சென்ற போது எனது வாயினில் தென்பட்டன. வீட்டுக்கு வந்த பின் பூஜை அறையில் பார்த்த போது பழங்களின் எண்ணிக்கைக் குறைந்து காணப்பட்டன.

**செப்டெம்பர் 27, 2010 :** இன்று இறைவனுக்கு அளித்த ஆப்பிள்கள் சில எனது வாயிலும் தட்டுப்பட்டன. அதே போன்று எனது தொண்டையிலிருந்து ஒரு வாழைப் பழம் வந்தது. நசுங்காது வந்த அந்த வாழைப்பழத்தினைக் கண்டு எனது மகளும் கணவரும் வியந்தனர். இந்நிகழ்ச்சி எனது கழுத்துப் பகுதியில் சிறிது வலியை ஏற்படுத்தியது. பூஜை அறை சென்று பார்த்த போது அங்கு வைக்கப்பட்டிருந்த வாழைப்பழங்களில் ஒரே ஒரு வாழைப்பழம் மட்டும் காணவில்லை. மிச்சம் இருந்த
வாழை பழத்தில், சிறிது தேன் துளியும் காணப்பட்டது. மூன்று வாரங்களாக தொடர்ந்து தேன் ஒழுகிக் கொண்டே இருந்தது.

**அக்டோபர் 10, 2010 :** இன்று இறைவனுக்கு அளித்த நைவேத்தியம் ஆப்பிள். அதற்குப் பிறகு சமையலறையில் நான் இருந்த போது ஒரு நல்ல நறுமணம் கமழத் தொடங்கியது. பூஜை அறை சென்று பார்த்த போது அங்கு ஆப்பிள் தட்டில் திருப்பதி லட்டு இருந்தது. நாங்கள் திருப்பதி லட்டினைப் பல முறை ருசித்திருந்தாலும் , அன்று அவ்வளவு சூடான லட்டும், நெய் வழியும் லட்டினையும் கண்டு, சொல்லில் அடங்காத வியப்புக் கொண்டோம். அந்த லட்டின் சுவையும் தேவாம்ருதமாக இருந்தது.

ஒரு இல்லத்தரசியாக "ஏழுமலையான் அற்புதங்கள்" என்ற இந்த நூலினை எழுதுவது என்பது எட்டாது கனி. எனது கணவரின் ஊக்கமும் எனது மகளின் ஒத்துழைப்பும், அனைத்துக்கும் மேலாக ஏழுமலையான் பத்மாவதி தாயாரின் அனுகிரகத்தினாலும் இந்நூல் வெளிவருகிறது. "ஸ்ரீ வெங்கடேஸ்வர விரதம்" என்ற நூலினை எழுதிய ஸ்ரீ திம்மராஜூ விஸ்வபதி ராமகிருஷ்ண மூர்த்தி அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூல் எழுத உதவிய அனைத்து ஆன்மீக அன்பர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, அந்த ஏழுமலையப்பனின் பரிபூரண அனுக்கிரகம் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிக்கொள்கிறேன் . ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸ்வாமி அருளால் எல்லா நலன்களும் எல்லோருக்கும் கிட்டட்டும்.

**லலிதா ருஷிகேஷ்**

# அருள்மிகு ஸ்ரீ வெங்கடேஸ்வர மந்திரம்

கலியுக வரதன் மலையப்ப சுவாமி வேத சாரம்ஸமாக எனக்கு அளித்த சில மந்திரங்கள். இவற்றினை அனுதினமும் பக்தி சிரத்தையுடன் உச்சரிக்கும் ஒவ்வொருவருக்கும் களங்கமில்லாத பக்தி பெருகும் என்பதில் எந்த ஐயமுமில்லை.

முராரிஸேவக ஜராதிபீடித னிரார்திஜீவன னிராஷ
பூஸுர வராதிஸுந்தர ஸுராங்கனாரதி
கராங்க ஸௌஷ்டவ குமாரதாக்றுதி குமாரதாரக
ஸமாபனோதய தனூனபாதக மஹாபதாமய
விஹாபனோதித ஸகலபுவன விதித
குமாரதாராபிதான தீர்தாதிஷ்டிதஸ்ய,
தரணிதல கதஸகல ஹதகலில ஷுபஸலில
கதபஹுள விவிதமல ஹதிசதுர ருசிரதர
விலோகனமாத்ர விதளித விவித மஹாபாதக
ஸ்வாமிபுஷ்கரிணீ ஸமேதஸ்ய

இந்த மந்திரத்தினைத் தினம் உச்சரிக்கும் ஒவ்வொருவருக்கும் ஆரோக்யமான மற்றும் வளமான வாழ்வு கிட்டும் என்பது திண்ணம்.

**லலிதா ருஷிகேஷ்**

# விரதத்திற்கு தேவையான பொருட்கள்

6 தேங்காய்கள் (கலசம்: 1; கதை: 5)
வஸ்திரம் (காட்டன்), கலசம், புதிய ரவிக்கை துண்டு, மஞ்சள், குங்குமம், அக்ஷதை (அரிசி + மஞ்சள் + நல்லெண்ணெ), ஊதுபத்தி
கற்பூரம் (ஆரத்திக்கு), வெற்றிலை/மாவிலை (கலசம்: 3/5, விநாயக பூஜை: 2), துளசி இலைகள்
பஞ்சாமிர்தம்: பசும் பால், தயிர், தேன், நெய், சர்க்கரை, வெல்லம் (விநாயகருக்கு நைவேத்தியம்),
விரத நைவேத்தியம்:
கோதுமை ரவை, நெய், ஏலக்காய், வாழைப்பழம், சர்க்கரை

# விரத நைவேத்தியம் செய்முறை

ஒரு பாத்திரத்தில் தேவையான அளவு நெய்யுடன், கோதுமை ரவையும் கலந்து மெல்லிய சூட்டில் , நன்கு வாசம் வரும் வரை , பொன்னிறமாக வறுத்து வைக்கவும். சூடு ஆறியபின் அதில் சர்க்கரை, ஏலக்காய் மற்றும் வாழைப்பழத் துண்டுகளைச் சேர்க்கவும். இந்த மகா நைவேத்யத்தில் தேங்காய் மற்றும் உலர்ந்த பழங்களையும் சேர்த்துக்கொள்ளலாம்.

# விரத வழிமுறைகள்

(ஸ்ரீ திம்மராஜூ விஸ்வபதி ராமகிருஷ்ண மூர்த்தி எழுதியது)

ஸ்ரீ வெங்கடேஸ்வர விரதமே இந்த கலியுகத்தில் நாம் மிகச் சுலமாக செய்யக் கூடியது . வைகுண்டத்தில் உள்ள சக்திமிகு ஸ்ரீ நாராயணனின் திருஅவதாரமான திருமலா திருப்பதியில் வாஸம் செய்யும்
ஸ்ரீ வெங்கடேஸ்வர பெருமாளே, இந்த விரதத்தைச் செய்யும்படி எனக்கு அன்புக் கட்டளையிட்டு ஆசீர்வாதம் அளித்துள்ளார்.
அதுவும் ஏழுமலையப்பனுக்கு மிகவும் பிரீதியான இந்த விரதம் மேற்கொள்வதால் உடல் நலம், செல்வ வளம், தொழில் வளர்ச்சி மற்றும் வேலை (பணிகள்) முன்னேற்றம் கிட்டும்.
ஒவ்வொருவருடைய நேர/கால வசதி மற்றும் பொருளாதார நிலைக்கு ஏற்றவாறு இந்த விரதத்தினை நாம் அனுசரித்துக் கொள்ளலாம். இந்த விரதத்தினை எப்போது வேண்டுமானாலும் செய்யலாம். எனினும் கீழ்க்காணும் நாட்களில் செய்தால் விசேஷம்:
மாதங்கள்: மார்கழி, கார்த்திகை, மாசி, பௌர்ணமி, பஞ்சமி, சப்தமி, ஏகாதசி.
நட்சத்திரம்: சிரவணம்,ஸ்வாதி,
இந்த விரத்தினைக் காலை/மாலை செய்யலாம். இதில் ஐந்து திவ்ய கதைகள் உள்ளன. முதலாவது ஏழுமலையப்பனே கூறி அருளியது. மற்றவை ராஜரிஷி, தேவரிஷி மற்றும் பல ரிஷிகள் (பரத்வாஜர், அத்ரி) கூறி அருளியது. இந்த விரதத்தினை வீட்டிலும் செய்யலாம், அல்லது கோவில், நதிக்கரை போன்ற தூய புண்ணிய இடங்களிலும் செய்யலாம். முடிந்த வரை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்களையும் அழைத்துக் கொள்ளவும்.

முதலில் ஒரு சுத்தமான இடத்தில் மேடை அமைத்துக் கொள்ளவும். அதில் பெருமாள் விக்ரஹம் / படம் எழுந்தருளச் செய்யவும்.
ஸ்ரீதேவி / பூதேவியுடன் காட்சி தரும் ஸ்ரீ கல்யாண வெங்கடேஸ்வர பெருமாள் விக்ரஹம் / படம் மிகவும் சிறப்பு.
விரதத்தினைச் சிரத்தையுடன் மிகச் சிறப்போடு செய்பவர்களிடம், இறைவன் தானே நேரில் வந்து பிரஸாதத்தைப் பெற்றுக் கொள்வான் என்பது திண்ணம்.
ஒவ்வொரு கதை முடிவிலும் ஒரு தேங்காய் உடைக்கவும். மகா பிரஸாதமாக கோதுமை ரவா + சக்கரை + வாழைப்பழ துண்டுகள் நைவேத்தியம் செய்யவும்.. ஒவ்வொரு கதையும் படித்து முடித்த பின், கோவிந்தா... கோவிந்தா... கோவிந்தா... என்று அவன் திரு நாமத்தை மூன்று முறை சொல்லி நமஸ்கரிக்கவும்.
பகவானுக்கு இஷ்டமான பத்ரம் துளசி . பூஜைக்கு நாம் அதிகமான துளசி பத்திரத்தைப் பயன் படுத்தினால், மிகுதியான நல்ல பலனை நாம் அடைவோம். விரத முடிவில் துளசி பிரஸாதம் உண்டால் கொடிய நோயும் விலகும், மற்றும் அஷ்ட ஐஸ்வர்யங்களும் பெருகும்.
விரத முடிவில் மகா பிரஸாதத்தில் தேங்காய்த் துண்டுகளைக் கலந்து நைவேத்தியம் செய்யவும். இந்த பிரஸாதத்தினை விநியோகம் செய்வதாலும், உண்பாதாலும் நம் துன்பங்கள் அனைத்தும் விலகி, பெரும் புண்ணிய பலன்கள் அனைத்தும் நம்மை நாடிவரும்.
முடிந்த வரை இந்த விரதத்தினைக் கலச ஸ்தாபனம் கொண்டு செய்தல் உசிதம். அரிசி / தண்ணீர் நிரப்பிய குடம் மீது தேங்காயை வெற்றிலை / மாவிலைக்கு இடையே சொருகலாக வைத்து, அதற்கு பிறகு மந்திரங்களையும், கதைகளையும் படிக்க வேண்டும்.

**ஏதோ ஒரு சில காரணத்தினால், மேற்கூறியவாறு விரதம் செய்ய முடியாமல் போனால், பகவான் அருளால் குறைந்த பட்சமாவது பெருமாள் விக்ரகமோ / படமோ வைத்து , அதன் முன்னர் அமைதியாக அமர்ந்து இந்த விரத்தினை அனுசரிக்கலாம். முதலில் மனதிற்குள் விநாயகர் வழிபாடு செய்யவும். பிறகு அஷ்ட திக்கு தேவதைகள் மற்றும் நவக்கிரஹங்களுக்கு வந்தனம் செய்யவும். துளசி, தேங்காய், புஷ்பம், பழங்களைத் தட்டில் வைத்துக் கொள்ளுங்கள்அதற்கு பிறகு இறைவனை நோக்கிக் கைகூப்பித் . தொழுது, கதைகளைப் படித்துக் கொள்ளவும்முடிவில் தேங்காய் ., பழம் மற்றும் புஷ்பங்களை நைவேத்தியம் செய்யவும் .இந்த பிரஸாதத்தினை உண்பதால் அனைத்துத் துன்பங்களும் நீங்கி , சகல சௌபாக்கியங்களும் ஏற்படும்.**

நமக்கு ஏற்படும் விக்னங்கள் யாவும் அந்த எல்லாம் வல்ல இறைவனுக்குத் தெரியும்,விக்னங்கள் யாவும் நம்மை விட்டு விலக, அந்த கருணா சாகரனிடம் பணிந்து முறையிட்டால், அவை அனைத்தும் நம்மை விட்டு விலகி, நமது கோரிக்கைகளும் நிச்சியம் நிறைவேறி, அஷ்ட ஐஸ்வர்யங்களும் பெருகும்.

அதனால் பக்தக் கோடி பெருமக்களே ! ஸ்ரீ வெங்கடேஸ்வர விரதத்தை அனுசரித்து, அந்த வைகுண்ட நாதனின் அனுக்கிரகத்தைப் பெற விரைந்திடுவீர்.

**!! சமஸ்த சன் மங்களானி பவந்து !!**
**ஸ்ரீ லக்ஷ்மி ஸ்ரீநிவாச கடாக்ஷ சித்திரஸ்து ||**

# ஸ்ரீ வெங்கடேஸ்வர விரதம்

## ஸ்ரீ கணபதி தியானம்

**வக்ரதுண்ட மஹாகாய கோடிஸூர்ய ஸமப்ரப ।**
**நிர்விக்னம் குரு மே தேவ ஸர்வ கார்யேஷு ஸர்வதா ॥**

**சுக்லாம் பரதரம் விஷ்ணும் ச சிவர்ணம் சதுர்ப்புஜம் ।**
**பிரஸன்ன வதனம் தியாயேத் ஸர்வ விக்நோப சாந்தயே ॥**

**ததேவ லக்னம் ஸுதினம் ததேவ தாராபலம் சந்த்ரபலம் ததேவ ।**
**வித்யாபலம் தைவபலம் ததேவ லக்ஷ்மீபதே தேங்க்ரியுகம் ஸ்மராமி ॥**

## ஆசமனம்

| | |
|---|---|
| ஓம் கேஸவாய நம: । | ஓம் ஸங்கர்ஷணாய நம:। |
| ஓம் நாராயணாய நம: । | ஓம் வாசுதேவாய நம: । |
| ஓம் மாதவாய நம:। | ஓம் ப்ரத்யும்நாய நம: । |
| ஓம் கோவிந்தாய நம:। | ஓம் அநிருத்தாய நம: । |
| ஓம் விஷ்ணவே நம: । | ஓம் புருஷோத்தமாயநம:। |
| ஓம் மதுசூதனாய நம: । | ஓம் அதோக்ஷஜாய நம: । |
| ஓம் த்ரிவிக்ரமாய நம: । | ஓம் நரஸிம்ஹாய நம: । |
| ஓம் வாமனாய நம: । | ஓம் அச்யுதாயநம: । 20 |
| ஓம் ஸ்ரீதராய நம: । | ஓம் ஜனார்த்தனாய நம: । |
| ஓம் ஹ்ருஷீகேசாயநம: । 10 | ஓம் உபேந்த்ராய நம: । |
| ஓம் பத்மநாபாய நம: । | ஓம் ஹரயே நம: । |
| ஓம் தாமோதராய நம: । | ஓம் ஸ்ரீக்ருஷ்ணாய நம: । |

## பூமிப்ரார்த்தனை

**உத்திஷ்டாந்து பூதபிஷாசா: ஏதே பூமி பாரகா: ।**
**ஏதேஷாம விரோதேன பிரஹ்மகர்ம சமாரபே ॥**
(அக்ஷதைகளைப் பின்னால் வைத்து விட்டு, வலது கையால் மூக்கை மூடிக்கொண்டு ப்ராணாயாமம் செய்யவும்.)

## ப்ரணாயாமம்

**ஓம் பூ:, ஓம் புவ:, ஓம் ஸுவ:, ஓம் மஹ:, ஓம் ஜ ந:, ஓம் தப:, ஓம் ஸத்யம், ஓம் தத்ஸவிதுர்வரேண்யம், பர்கோ தேவஸ்ய தீமஹி, தியோ யோ ந: ப்ரசோதயாத், ஓம் ஆபோ, ஜ்யோதீர ஸோம்ருதம் ப்ரஹ்ம, பூர்புவஸ் ஸுவரோம்.**

**மமோபாத்த துரிதக்ஷயத்வாரா ஸ்ரீ பரமேச்'வர ப்ரீத்யர்த்தம் சு'பே சோ'பநே முஹூர்த்தே, ஸ்ரீ மஹா-விஷ்ணோ- ராக்ஞயா ப்ரவர்த்த மாநஸ்ய ஆத்ய ப்ரஹ்மண: த்விதீய பரார்த்தே, ஸ்வேத வராஹ கல்பே, வைவஸ்வத மந்வந்தரே, கலியுகே, ப்ரதமபாதே ஜம்பூத்வீபே பாரதவர்ஷே, பரத கண்டே மேரோ: தக்ஷிணே திக்பாகே, ஸ்ரீ சைலஸ்ய (அருகில் இருக்கும் ஆறுகளின் பெயர்களை சொல்லவும்) ப்ரதேஷே, க்ருஷ்ணா, கோதாவரி மத்யபாகே, ஸ்வ / ஷோபன க்ருஹே, சமஸ்த தேவதா ப்ராஹ்மண, ஹரிஹர ஸன்னிதௌ, அஸ்மின் வர்த்தமானே, வ்யாவஹாரிகே சந்ரமாநேந ஸ்வஸ்திஸ்ரீ ப்ரபவாதி நாம ஸம்வத்ஸரே மத்யே (இன்றைய தேதி, மாதம் மற்றும் வருஷத்தின் பெயரை சொல்லவும்) ஸம்வத்ஸரே, ஆயனே, ருதௌ, மாஸே , பக்ஷே, திதௌ வாஸரே, சு'பநக்ஷத்ரே, சு'பயோகே சு'பகரண ஏவங்குண விசேஷண விஷிஸ்டாயாம் சு'பதிதௌ ஸ்ரீமான் (உங்கள் பெயரை சொல்லவும்) கோத்ரஹ (உங்கள் கோத்திரத்தின் பெயரை சொல்லவும்) நாமதேயஹ தர்மபத்னீ ஸமேதஸ்ய அஸ்மாகம் ஸஹகுடும்பானாம், க்ஷேம, ஸ்தைர்ய, தைர்ய, விஜய, ஆயுர்-ஆரொக்ய, ஐஸ்வர்யா அபிவ்ருத்யர்த்தம், தர்மார்த்த காம மோக்ஷ சதுர்வித புருஷார்த்த, பல ஸித்யர்த்தம் மமோபாத்த துரிதக்ஷய த்வாரா ஸ்ரீ பரமேஸ்வர ப்ரீத்யர்த்தம் ஸ்ரீ லக்ஷ்மி பத்மாவதி சமேத ஸ்ரீ வெங்கடேஸ்வர தேவதா முத்திஷ்ய ஸ்ரீ வெங்கடேஸ்வர வ்ரதகல்ப கரிஷ்யே திரவ்யே: சம்பவத்பிஹி பதார்த்தே ஸம்பவதா நியமேன யாவச்சக்தி த்யான ஆவாஹனாதி ஷோடசோ'பசார பூஜாம் கரிஷ்யே.**
(சிறிது தீர்த்தத்தை எடுத்து கைகளை சுத்தம் செய்துகொள்ளவும்.)

## ததங்கம் கலஷாராதனம் கரிஷ்யே

(கலசத்தினை சுவாமியின் வலது பக்கம் வைத்து விட்டு கந்தம், கும்குமம் மற்றும் அக்ஷதை போடவும் அதற்கு பிறகு ஒரு புஷ்பத்தினை வைத்து விட்டு கீழ்க்காணும் மந்திரத்தினை சொல்லவும்.)

**கலச'ஸ்ய முகே விஷ்ணு: கண்டே ருத்ர: சமாச்'ரித: ।**
**மூலே தத்ரஸ்திதோ ப்ரஹ்மா மத்யே மாத்ருகணா: ஸ்ரீதா: ॥**
**குக்ஷௌது ஸாகரா ஸர்வே சப்தத்வீபா வஸுந்தரா ।**
**ருக்வேதோத யஜுர்வேத: ஸாமவேதோப்யதர்வண: ॥**
**அங்கைச்'ச ஸஹிதா:ஸர்வே கலசா'ம்பு ஸமாச்'ரிதா:।**
**கலஸே கந்த புஷ்பாக்ஷதான் நிக்ஷிப்த்ய, ஹஸ்தேனாசாத்ய, ॥**
**ஆபோ வா இதம் சர்வம், விச்'வாபூதான்யாப: ப்ராணாவா ஆப:, ।**
**பச'வ ஆபோன ராபோம்ருத மாப ஸம்ராடாபோ, விராடாப, ॥**
**ஸ்வராடாப, சந்தாகம் ஸ்யாபோ, ஜோதீகம்ஷ்யாபோ, யஜூகம்ஷ்யாப, ।**
**ஸத்யமாப, ஸர்வாதேவதா அபோ, பூர்புவசு'வராப ஓம் ॥**
(கலசத்தில் நீர் நிரப்பி துளசி இலைகளை அதில் போடவும்.)

## ஸ்லோகம்

**கங்கே! ச யமுனே! க்ரிஷ்னே! கோதாவரி சரஸ்வதி! |**
**நர்மதே! சிந்து காவேரியோ! ஜலேஸ்மின் சந்நிதிம் குரு ||**
**காவேரி துங்க பத்ரா ச க்ரிஷ்ணவேநீ ச கௌதமீ |**
**பாகீரதீ ச விக்யாதா பஞ்சகங்கா ப்ரகீர்த்திடா: ||**
**கலசோ'தகேன தேவமாத்மானம் பூஜாத்ரவ்யானி ச ஸம்ப்ரோக்ஷ்ய**
(ஒரு புஷ்பத்தினைக் கொண்டு கலச தீர்த்தம் சிறிதளவு எடுத்து பூஜா திரவ்யங்களையும் ஸ்வாமியையும் தன்னையும் ரோக்ஷணம் செய்துகொள்க.)

## ஸ்ரீ கணபதி பிரார்த்தனை

**சு'க்லாம் பரதரம் விஷ்ணும் ச' சி'வர்ணம் சதுர்ப்புஜம் |**
**பிரஸன்ன வதனம் தியாயேத் ஸர்வ விக்நோப சா'ந்தயே ||**
**ஆதௌ நிர்விக்னேன வ்ரத பரிஸமாப்யர்தம் கணபதி பூஜாம் கரிஷ்யே ||**

## அத கணபதி பூஜா

**ஓம் கணாநாம் த்வா கணபதிகும் ஹவாமஹே**
**கவிம் கவீநாம் உபமஸ்ரவஸ்தமம், |**
**ஜ்யேஷ்டராஜம் ப்ரஹ்மணாம் ப்ரஹ்மணஸ்பத ஆந:**
**ஸ்ருண்வந்நூதிபிஸ் ஸீத ஸாதனம்||**
**ஸ்ரீ மஹாகணாதிபதயே நம: த்யாயாமி, த்யானம் ஸமர்ப்பயாமி |**
**ஆவாஹயாமி, ரத்ன ஸிம்ஹாஸனம் ஸமர்ப்பயாமி |**
**பாதையோ பாத்யம் ஸமர்ப்பயாமி |**
**ஹஸ்தயோர ர்க்யம் ஸமர்ப்பயாமி |**
**முகே ஆசமநீயம் ஸமர்ப்பயாமி |**

**ஆபோ ஹிஷ்டா மயோபுவ: தான ஊர்ஜே ததாதன, மஹேரணாய சக்ஷஸே யோவ: ஷிவதமோ ரஸ: தஸ்ய பாஜயதே ஹன: உஷதீரிவ மாதர: தஸ்மா அரங்க மாமவோ யஸ்ய க்ஷயாய ஜிந்வத, ஆபோஜன யதா சன:**
ஸ்ரீ மஹாகணாதிபதயே நம: ஷுத்தோதக ஸ்நானம் ஸமர்ப்பயாமி |
ஸ்நானாநந்தரம் ஷுத்த ஆசமனீயம் ஸமர்ப்பயாமி |

**அபிவஸ்த்ராஸூ வஸனான்யர் ஷாபீடேனூஸ்ஸு துக்ஹா: பூஜமான: |**
**அபிசந்ரா பர்த வே நோ ஹிரண்யாபிய ஷ்வான்ரதிநோதேவ ஸோம ||**
ஸ்ரீ மஹாகணாதிபதயே நம: வஸ்த்ர யுக்மம் ஸமர்ப்பயாமி |

**யஜ்ஞோபவீதம் பரமம் பவித்ரம் ப்ரஜாபதேர் யத் ஸஹஜம் புரஸ்தாத் |**
**ஆயுஷ்ய மக்ர்யம் பிரதிமுஞ்ச சுப்ரம் யஜ்ஞோபவீதம் பலமஸ்து தேஜ: ||**
**ஸ்ரீ மஹாகணாதிபதயே நம: யஜ்ஞோபவீதம் ஸமர்ப்பயாமி |**

**கந்தத்வாராம் துராதர்ஷாம் நித்யபுஷ்டாம் கரீஷிணீம் ।**
**ஈஸ்வரீம் ஸர்வ பூதாநாம் தாமிஹோபஹ்வயே ஷ்ரியம் ॥**
**ஸ்ரீ மஹாகணாதிபதயே நம: திவ்ய ஸ்ரீ சந்தனம் ஸமர்ப்பயாமி ।**

**ஆயனே தே பராயனே துர்வாரோஹந்து புஷ்பிணீ: ।**
**ஹ்ரதாஸ்ச புன்டரீகானி சமுத்ரஸ்ய க்ருஹா இமே ॥**
**ஸ்ரீ மஹாகணாதிபதயே நம: துர்வாதி நானாவித புஷ்பாணி ஸமர்ப்பயாமி ।**

# அத: ஸ்ரீ ஷோடசநாம பூஜா

| | |
|---|---|
| ஓம் ஸுமுகாய நம: । | ஓம் கணாத்யக்ஷாய நம: । |
| ஓம் ஏகதந்தாய நம: । | ஓம் பாலசந்த்ராய நம: । |
| ஓம் கபிலாய நம: । | ஓம் கஜானநாய நம: । |
| ஓம் கஜகர்ணிகாய நம: । | ஓம் வக்ரதுண்டாய நம: । |
| ஓம் லம்போதராய நம: । | ஓம் சூ'ர்ப்ப கர்ணாய நம: । |
| ஓம் விகடாய நம: । | ஓம் ஹேரம்பாய நம: । |
| ஓம் விக்னராஜாய நம: । | ஓம் ஸ்கந்த பூர்வஜாய நம: । |
| ஓம் கணாதிபதையே நம: । | ஓம் ஸர்வஸித்தி ப்ரதாயகாய நம: । |
| ஓம் தூம கேதவே நம: । | ஓம் ஸ்ரீ மஹாகணாதிபதயே நம: । |

நாநாவித பரிமள புஷ்பாணி ஸமர்ப்பயாமி ।

**வனஸ்பத்யூர் பவைர்திவ்யை நானா கந்தைஸு ஸம்யுதம் ।**
**ஆக்ரேய: ஸர்வதேவாநாம் தூபோயம் ப்ரதிக்ருஹ்யதாம் ॥**

ஸ்ரீ **மஹாகணாதிபதயே** நம: தூபம் ஆக்ராபயாமி ।

**ஸாஜ்யம் த்ரிவர்த்தி ஸம்யுக்தம் வஹ்நிநா யோஜிதம் ப்ரியம் ।**
**க்ருஹான மங்களம் தீபம் த்ரைலோக்ய திமிராபஹம் ॥**
**பக்தயாதீபம் ப்ரய ச்சாமி தேவாய பரமாத்மனே ।**
**த்ராஹி மாம் னரகாத்கோரா திவ்யஜ்யோதிர் நமோஸ்துதே ॥**

ஸ்ரீ **மஹாகணாதிபதயே** நம: தீபம் ஸமர்ப்பயாமி ।
தூப தீபானந்தரம் ஆசமனீயம் ஸமர்ப்பயாமி ।

# நைவேத்யம்

ஒரு தட்டில் சிறிய வெல்லத்தை வைத்து கொஞ்சம் தண்ணீரை ஊற்றவும்

**ஓம் பூர்புவஸ்ஸுவ: தத்ஸவிதுர்வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி,**
**தியோ யோ ந: ப்ரசோதயாத்**
**"ஸத்யம் த்வர்த்தேன பரிஷிஞ்சாமி"** (பூஜையை காலையில் செய்தால் இதை சொல்லவும்)
**"ருதம் த்வா ஸத்யேன பரிஷிஞ்சாமி** " (பூஜையை மாலையில் செய்தால் இதை சொல்லவும்)
ஸ்ரீ **மஹாகணாதிபதயே** நம: குடோபஹார நைவேத்யம் ஸமர்ப்பயாமி ।

**அம்ருதமஸ்து அம்ருதோபஸ்தரணமஸி ॥**
**ஓம் பிராணாய ஸ்வாஹா । ஓம் அபானாய ஸ்வாஹா । ஓம் வ்யானாய ஸ்வாஹா ।**
**ஓம் உதானாய ஸ்வாஹா । ஓம் ஸமானாய ஸ்வாஹா**
மத்யே மத்யே பாநீயம் ஸமர்ப்பயாமி ।
அம்ருதாபிதாநமஸி உத்தராபோச்சநம் ஸமர்ப்பயாமி ।
ஹஸ்தௌ பிரக்ஷாலயாமி, **சு'த்த ஆ**சமனீயம் ஸமர்ப்பயாமி ।

**பூகீபல ஸ்ஸகர்பூரை ர்நாகவல்லீ தளைர்யுதம்।**
**முக்தாசூர்ண ஸமாயுக்தம் தாம்பூலம் பிரதிக்ருஹ்யதாம் ॥**
ஸ்ரீ **மஹாகணாதிபதயே** நம: தாம்பூலம் ஸமர்ப்பயாமி ।

**ஓம் கணாநாம் த்வா கணபதிகும் ஹவாமஹே**
**கவிம் கவீநாம் உபமஸ்ரவஸ்தமம், ।**
**ஜ்யேஷ்டராஜம் ப்ரஹ்மணாம் ப்ரஹ்மணஸ்பத**
**ஆந: ஸ்ருண்வந்நூதிபிஸ் ஸீத ஸாதனம்॥**
ஸ்ரீ **மஹாகணாதிபதயே** நம: ஸுவர்ண மந்த்ரபுஷ்பம் ஸமர்ப்பயாமி ।

**மந்த்ரஹீநம் க்ரியாஹீநம் பக்திஹீநம் கணாதிப ।**
**யத்பூஜிதம் மயா தேவ பரிபூர்ணம் ததஸ்து தே ॥**
**யஜ்ஞேன யஜ்ஞ மயஜந்த தேவா ஸ்தானி தர்மாணி ப்ரதமான்யாசன் ।**
**தே ஹ நாகம் மஹிமான: ஸசந்தே யத்ர பூர்வே ஸாத்யா ஸந்தி தேவா: ॥**

## புனராசமம்

**அனயா த்யான வாஹனாதி ஷோடோபசார பூஜையா ச பகவான்
ஸர்வாத்மக: ।
ஸ்ரீ மஹா கணாதிபதி ஸுப்ரீதோ வரதோ பூத்வ உத்தரே கர்மன்ய விக்ஹ்னமஸ்த்விதி பவந்தோ ப்ருவந்து உத்தரே கர்மன்ய விக்ஹ்னமஸ்து கணாதிபதி ப்ரஸாதம் சிரஸா க்ருஹ்ணாமி ॥
ஸஹஸ்ரபரமா தேவி ஷதமூலா ஷதாம்குரா ।
ஸர்வகம் ஹரது மே பாபம் தூர்வாதுஸ்வப்னநாஷனி ।
கணபதி யதாஸ்தானம் த்வாஸயாமி ॥**

## பிராண ப்ரதிஷ்டா

**அஸுநீதே புநரஸ்மாஸு சக்ஷு: புந: ப்ராணமிஹ நோ தேஹி போகம் । ஜ்யோக் பச்யேம ஸூர்ய முச்சரந்த மநுமதே ம்ருளயா ந: ஸ்வஸ்தி ॥
அம்ருதம் வை ப்ராண அம்ருதமாப: ப்ராணானேவ யதா ஸ்தானமுபஹ்வயதே..**
(கடவுளின் விக்ரஹத்தையோ அல்லது படத்தையோ தொடவும்.)

**ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸ்வாமி ஆவாஹயாமி,ஸ்த்தாபயாமி, பூஜயாமி
ஸ்திரோபவ, வரதோபவ, ஸுப்ரஸன்னோ பவ, ஸ்திராஸனம் குரு ।**

## தியானம்

**ஸாந்தாகாரம் புஜகஷயனம் பத்மநாபம் ஸுரேஷம் ।
விஸ்வாதாரம் ககன ஸத்ருஷம் மேகவர்ணம் ஷுபாங்கம் ॥
லக்ஷ்மீகாந்தம் கமலநயனம் யோகிஹ்ருத்-த்யான கம்யம் ।
வந்தே விஷ்ணும் பவபயஹரம் ஸர்வலோகைக நாதம் ॥
வந்தே விஷ்ணும் பவபயஹரம் ஸர்வலோகைக நாதம் ॥**
ஸ்ரீ லக்ஷ்மி பத்மாவதி ஸமேத ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸ்வாமினே நம:
த்யாயாமி, த்யானம் ஸமர்ப்பயாமி ।
(கடவுளின் விக்ரகம் / படத்திர்க்கு முன் ஒரு புஷ்பத்தையோ அல்லது இலையையோ ஸமர்ப்பிக்கவும்.)

## ஆவாஹனம்

**ஆவாஹயாமி தேவேஷ சித்தகந்தர்வ ஷேவித ।
யத்ரஹஸ்யமிதம் புன்யம் ஸர்வபாபஹரோஹர: ॥**
ஸ்ரீ லக்ஷ்மி பத்மாவதி ஸமேத ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸ்வாமினே நம: ஆவாஹயாமி ।
(கடவுளின் விக்ரகம் / படத்திர்க்கு முன் ஒரு புஷ்பத்தையோ அல்லது இலையையோ ஸமர்ப்பிக்கவும்.)

## ஆசனம்

**தேவதேவ ஜகன்னாத ப்ரனுத க்லேஷ னாஸன ।**
**ரத்னஸிம்ஹாஸனம் திவ்யம் க்ருஹாண மது ஸூதன ॥**
ஸ்ரீ லக்ஷ்மி பத்மாவதி ஸமேத ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸ்வாமினே நம: ரத்னஸிம்ஹாஸனம் ஸமர்ப்பயாமி ।
(கடவுளின் விக்ரகம் / படத்திர்க்கு முன் ஒரு புஷ்பத்தையோ அல்லது இலையையோ ஸமர்ப்பிக்கவும்.)

## பாத்யம்

**வாஞ்சிதம் குருமேதேவ துஷ்க்ருதம் ச வினாஷய ।**
**பாத்யம் க்ருஹாண பகவான் மாதுருத்ஸங்க ஸம்ஸ்தித ॥**
ஸ்ரீ லக்ஷ்மி பத்மாவதி ஸமேத ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸ்வாமினே நம: பாதையோ, பாத்யம் ஸமர்ப்பயாமி ।
(உத்தரணியாலே தீர்த்தம் எடுத்துக் கிண்ணத்திலே ஸமர்ப்பிக்கவும்.)

## அர்க்யம்

**குருஷ்வமே தயாம் தேவ ஸம்ஸாரார்தி பயாபஹ ।**
**ததிக்ஷீர ப்ஹலோபேதம் க்ருஹாண அர்க்ஹ்யம் நமோஸ்துதே ॥**
ஸ்ரீ லக்ஷ்மி பத்மாவதி ஸமேத ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸ்வாமினே நம:
ஹஸ்தயோ ரர்க்ஹ்யம் ஸமர்ப்பயாமி ।

(உத்தரணியாலே தீர்த்தம் எடுத்துக் கிண்ணத்திலே ஸமர்ப்பிக்கவும்.)

## ஆசமனம்

**நம ஸத்யாய ஷுத்தாய நித்யாய ஞ்யானரூபிணே ।**
**க்ருஹாணாச்சமனம் தேவ ஸர்வலோகைக நாயக ॥**
ஸ்ரீ லக்ஷ்மி பத்மாவதி ஸமேத ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸ்வாமினே நம:
முகே ஆசமனீயம் ஸமர்ப்பயாமி ।
(உத்தரணியாலே தீர்த்தம் எடுத்துக் கிண்ணத்திலே ஸமர்ப்பிக்கவும்.)

## பஞ்சாம்ருதஸ்நானம்

**பஞ்சாம்ருதம் மயாநீதம் பயோததிக்ருதம் மது ।**
**ஷர்கரா ஸஹிதம் சைவதேவத்வம் ப்ரதிக்ருஹ்யதாம் ॥**
ஸ்ரீ லக்ஷ்மி பத்மாவதி ஸமேத ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸ்வாமினே நம: பஞ்சாம்ருத ஸ்நானம் ஸமர்ப்பயாமி ।
(பஞ்சாம்ருதம் என்பது பசும்பால், தயிர், நெய், தேன், சர்க்கரை மற்றும் தண்ணீர் கலந்த கலவை ஆகும்.)

## ஸ்நானம்

**ஸ்வர்ணபாத்ரோதகம் கங்கா யமுனாதி ஸமன்விதம் ।**
**ஷுத்தோதகம் க்ருஹானேஷ ஸ்நானம் குரு யதாவிதி ॥**
ஸ்ரீ லக்ஷ்மி பத்மாவதி ஸமேத ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸ்வாமினே நம:
ஷுத்தோதகஸ்நானம் ஸமர்ப்பயாமி ।
(உத்தரணியாலே தீர்த்தம் எடுத்துக் கிண்ணத்திலே ஸமர்ப்பிக்கவும்.)

## வஸ்த்ரம்

**தப்தகாஞ்சன ஸந்காஷம் பீதாம்பர மிதம் ஹரே ।**
**ஸுக்ருஹான ஜகன்னாத ஸ்ரீநிவாஸ நமோஸ்துதே ॥**
ஸ்ரீ லக்ஷ்மி பத்மாவதி ஸமேத ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸ்வாமினே நம: வஸ்த்ர யுக்மாம் ஸமர்ப்பயாமி ।

## யக்ஞோபவீதம்

**யக்ஞோபவீதம் பரமம் பவித்ரம் ப்ரஜாபதேர் யத் ஸஹஜம் புரஸ்தாத் ।**
**ஆயுஷ்ய-மக்ரயம் ப்ரதிமுஞ்ச ஷுப்ரம் யக்ஞோபவீதம் பலமஸ்து தேஜ: ॥**
ஸ்ரீ லக்ஷ்மி பத்மாவதி ஸமேத ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸ்வாமினே நம: யக்ஞோபவீதம் ஸமர்ப்பயாமி ।

## கந்தம்

**சந்தனாகரு கஸ்தூரி கனஸார ஸமன்விதம் ।**
**கந்தம் க்ருஹாண கோவிந்த நானாகந்தஸ்சதாரய ॥**
ஸ்ரீ லக்ஷ்மி பத்மாவதி ஸமேத ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸ்வாமினே நம: திவ்யபரிமள கந்தான் ஸமர்ப்பயாமி ।
(கடவுளுக்கு சந்தனம் ஸமர்ப்பிக்கவும்.)

## அக்ஷதான்

**கோவிந்தா பரமானந்த ஹரித்ரா ஸஹிதக்ஷ்தான் ।**
**விஸ்வேஷ்வர விஷாலாக்ஷ க்ருஹாண பரமேஸ்வர ॥**
ஸ்ரீ லக்ஷ்மி பத்மாவதி ஸமேத ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸ்வாமினே நம: அக்ஷதான் ஸமர்ப்பயாமி ।
(அக்ஷதை ஸமர்ப்பிக்கவும்.)

## புஷ்பம்

**ஸுகந்தீநி ஸுபுஷ்பாணி ஜாஜீகுந்டமுகானிச ।**
**மாலதி வகுலாதேவி பூஜார்தம் ப்ரதிக்ருஹ்யதாம் ॥**
ஸ்ரீ லக்ஷ்மி பத்மாவதி ஸமேத ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸ்வாமினே நம:
புஷ்பம் ஸமர்ப்பயாமி ।
(புஷ்பம் ஸமர்ப்பிக்கவும்.)

## அங்க பூஜை

ஓம் ஸ்ரீ வெங்கடேஸ்வராய நம: பாதௌ பூஜயாமி |
ஓம் ஸ்ரீ வெங்கடாசலதீஷாய நம: குல்பௌ பூஜயாமி |
ஓம் ஸ்ரீ ப்ரதாயகாய நம: ஜானுநீ பூஜயாமி |
ஓம் ஸ்ரீ பத்மாவதி பதயே நம: ஜங்க்கே பூஜயாமி |
ஓம் ஸ்ரீ ஞானப்ரதாய நம: ஊரூ பூஜயாமி |
ஓம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸாய நம: கடிம் பூஜயாமி |
ஓம் ஸ்ரீ மஹாபாகாய நம: நாபிம் பூஜயாமி |
ஓம் ஸ்ரீ நிர்மலாய நம: உதரம் பூஜயாமி |
ஓம் ஸ்ரீ விஷால ஹ்ருதயாய நம: ஹ்ருதயம் பூஜயாமி |
ஓம் ஸ்ரீ பரிஷுத்தாத்மனே நம: ஸ்தநௌ பூஜயாமி |
ஓம் ஸ்ரீ புருஷோத்தமாய நம: புஜௌ பூஜயாமி |
ஓம் ஸ்ரீ ஸ்வர்ணஹஸ்தாய நம: ஹஸ்தௌ பூஜயாமி |
ஓம் ஸ்ரீ வரப்ரதாய நம: கண்டம் பூஜயாமி |
ஓம் ஸ்ரீ லோகநாதாய நம: ஸ்கந்தௌ பூஜயாமி |
ஓம் ஸ்ரீ சர்வேஸ்வராய நம: முகம் பூஜயாமி |
ஓம் ஸ்ரீ ரஸக்ஞாய நம: நாசி'காம் பூஜயாமி |
ஓம் ஸ்ரீ புன்யஷ்ரவண கீர்த்தனாய நம: ஷ்ரோத்ரே பூஜயாமி |
ஓம் ஸ்ரீ புல்லாம்புஜ விலோசனாய நம: நேத்ரே பூஜயாமி |
ஓம் ஸ்ரீ வர்சஸ்வினே நம: லலாடம் பூஜயாமி |
ஓம் ஸ்ரீ ரம்ய விக்ரஹாய நம: ஸர்வாண்யங்கானி பூஜயாமி|

ஓம் ஸ்ரீ லக்ஷ்மி பத்மாவதி ஸமேத ஸ்ரீ வெங்கடேஸ்வர
பரமாத்மனே நம: திவ்யஸுந்தர விக்ரஹம் பூஜயாமி |

# ஸ்ரீ வெங்கடேஸ்வர அஷ்டோத்தர சத நாமாவளி:

| | |
|---|---|
| ஓம் வெங்கடேஸாய நம: | ஓம் ஆகாஸ ராஜவரதாய நம: |
| ஓம் ஸ்ரீநிவாஸாய நம: | ஓம் யோகி-ஹ்ருத்பத்ம-மந்திராய நம: |
| ஓம் லக்ஷ்மீபதயே நம: | ஓம் தாமோதராய நம: |
| ஓம் அனாமயாய நம: | ஓம் ஜகத்பாலாய நம: |
| ஓம் அம்ருதாம்ஷாய நம: | ஓம் பாபக்னாய நம: |
| ஓம் ஜகத்வந்த்யாய நம: | ஓம் பக்தவத்ஸலாய நம: |
| ஓம் கோவிந்தாய நம: | ஓம் த்ரிவிக்ரமாய நம: |
| ஓம் ஸாஸ்வதாய நம: | ஓம் ஸிம்ஸுமாராய நம: |
| ஓம் ப்ரபவே நம: | ஓம் ஜடாமகுட-ஸோபிதாய நம: |
| ஓம் ஸேஷாத்ரி-நிலயாய நம: 10 | ஓம் ஸங்கமத்யோல்லஸன் மஜ்ஜு - |
| ஓம் தேவாய நம: | கிங்கிண்யாட்ய கரண்டகாய நம: 70 |
| ஓம் கேஸவாய நம: | ஓம் நீலமேக ஸ்யாம தனவே நம: |
| ஓம் மதுசூதனாய நம: | ஓம் பில்வ பத்ரார் ச்சன-ப்ரியாய நம: |
| ஓம் அம்ருதாய நம: | ஓம் ஜகத்-வ்யாபினே நம: |
| ஓம் மாதவாய நம: | ஓம் ஜகத்-கர்த்தே நம: |
| ஓம் க்ருஷ்ணாய நம: | ஓம் ஜகத்-ஸாக்ஷிணே நம: |
| ஓம் ஸ்ரீ ஹரயே நம: | ஓம் ஜகத்-பதயே நம: |
| ஓம் ஸ்ரீ ஜ்ஞான-பஞ்ஜராய நம: | ஓம் சிந்திதார்த்த ப்ரதாய நம |
| ஓம் ஸ்ரீ வத்ஸவக்ஷஸே நம: | ஓம் ஜிஷ்ணவே நம: |
| ஓம் ஸர்வேஸாய நம: 20 | ஓம் தாஸார்ஹாய நம: |
| ஓம் கோபாலாய நம: | ஓம் தஸ ரூபவதே நம: 80 |
| ஓம் புருஷோத்தமாய நம: | ஓம் தேவகீ நந்தனாய நம: |
| ஓம் கோபீஸ்வராய நம: | ஓம் ஸௌரயே நம: |
| ஓம் பரஞ்ஜ்யோதிஷே நம: | ஓம் ஹயக்ரீவாய நம: |
| ஓம் வைகுண்டபதயே நம: | ஓம் ஜனார்த்தனாய நம: |
| ஓம் அவ்யயாய நம: | ஓம் கன்யா-ஸ்ரவண தாரேஜ்யாய நம: |
| ஓம் ஸுதாதனவே நம: | ஓம் பீதாம்பரதராய நம: |
| ஓம் யாதவேந்த்ராய நம: | ஓம் அனகாய நம: |
| ஓம் நித்யயௌவன பவதே நம: | ஓம் வனமாலினே நம: |
| ஓம் சதுர்வேதாத்மகாய நம: 30 | ஓம் பத்மநாபாய நம: |
| ஓம் விஷ்ணவே நம: | ஓம் ம்ருகயாஸக்த-மானஸாய நம: 90 |
| ஓம் அச்சுதாய நம: | ஓம் அஸ்வாரூடாய நம: |
| ஓம் பத்மினீ-ப்ரியாய நம: | ஓம் கட்கதாரிணே நம: |
| ஓம் தராபதயே நம: | ஓம் தனார்ஜன-முத்ஸுகாய நம: |
| ஓம் ஸுரபதயே நம: | ஓம் கனஸாரல-ஸன்மத்ய-கஸ்தூரி - |
| ஓம் நிர்மலாய நம: | திலகோஜ்வலாய நம: |
| ஓம் தேவபூஜிதாய நம: | ஓம் ஸச்சிதானந்த-ரூபாய நம: |
| ஓம் சதுர்ப்புஜாய நம: | ஓம் ஜகன்மங்கள-தாயகாய நம: |
| ஓம் சக்ரதராய நம: | ஓம் யக்ஞரூபாய நம: |
| ஓம் த்ரிதாம்னே நம: 40 | ஓம் யக்ஞபோக்த்ரே நம: |

| | | |
|---|---|---|
| ஓம் | த்ரிகுணாஸ்ரயாய நம: | |
| ஓம் | நிர்விகல்பாய நம: | |
| ஓம் | நிஷ்களங்காய நம: | |
| ஓம் | நிராதங்காய நம: | |
| ஓம் | நிரஞ்ஜனாய நம: | |
| ஓம் | நிராபாஸாய நம: | |
| ஓம் | நித்யத்ருப்தாய நம: | |
| ஓம் | நிர்குணாய நம: | |
| ஓம் | நிருபத்ரவாய நம: | |
| ஓம் | கதாதராய நம: | 50 |
| ஓம் | ஸார்ங்கபாணயே நம: | |
| ஓம் | நந்தகினே நம: | |
| ஓம் | ஸங்கதாரகாய நம: | |
| ஓம் | அனேகமூர்த்தயே நம: | |
| ஓம் | அவ்யக்தாய நம: | |
| ஓம் | கடிஹஸ்தாய நம: | |
| ஓம் | வரப்ரதாய நம: | |
| ஓம் | அனேகாத்மனே நம: | |
| ஓம் | தீனபந்தவே நம: | |
| ஓம் | ஆர்த்தலோகா -பயப்ரதாய நம: | 60 |
| ஓம் | சின்மயாய நம: | |
| ஓம் | பரமேஸ்வராய நம: | 100 |
| ஓம் | பரமார்த்த-ப்ரதாய நம: | |
| ஓம் | ஸாந்தாய நம: | |
| ஓம் | ஸ்ரீமதே நம: | |
| ஓம் | தோர்த்தண்டவிக்ரமாய நம: | |
| ஓம் | பராத்-பராய நம: | |
| ஓம் | பரப்ரஹ்மனே நம: | |
| ஓம் | ஸ்ரீ விபவே நம: | |
| ஓம் | ஜகதீஸ்வராய நம: | 108 |

ஓம் இதி ஸ்ரீ வெங்கடேஸ்வர அஷ்டோத்தர சத நாமாவளி: ஸம்பூர்ணம்

# மஹா லக்ஷ்மி அஷ்டோத்தர சத நாமாவளி:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஓம் | ப்ரக்ருத்யை நம: | | ஓம் | சந்த்ரரூபாயை நம: | |
| ஓம் | விக்ருத்யை நம: | | ஓம் | இந்திராயை நம: | |
| ஓம் | வித்யாயை நம: | | ஓம் | இந்து சீதலாயை நம: | |
| ஓம் | ஸர்வபூதஹித ப்ரதாயை நம: | | ஓம் | ஆஹ்லாத ஜனன்யை நம: | |
| ஓம் | ச்'ரத்தாயை நம: | | ஓம் | புஷ்ட்யை நம: | |
| ஓம் | விபூத்யை நம: | | ஓம் | சி'வாயை நம: | |
| ஓம் | ஸுரப்யை நம: | | ஓம் | சி'வகர்யை நம: | |
| ஓம் | பரமாத்மிகாயை நம: | | ஓம் | ஸத்யை நம: | |
| ஓம் | வாசே நம: | | ஓம் | விமலாயை நம: | |
| ஓம் | பத்மாலயாயை நம: | 10 | ஓம் | விச்'வஜனன்யை நம: | 70 |
| ஓம் | பத்மாயை நம: | | ஓம் | துஷ்ட்யை நம: | |
| ஓம் | சு'சயே நம: | | ஓம் | தாரித்ர்யநாசி'ந்யை நம: | |
| ஓம் | ஸ்வாஹாயை நம: | | ஓம் | ப்ரீதி புஷ்கரிண்யை நம: | |
| ஓம் | ஸ்வதாயை நம: | | ஓம் | சா'ந்தாயை நம: | |
| ஓம் | ஸுதாயை நம: | | ஓம் | சு'க்லமால்யாம்பராயை நம: | |
| ஓம் | தன்யாயை நம: | | ஓம் | ச்'ரியை நம: | |
| ஓம் | ஹிரண்மய்யை நம: | | ஓம் | பாஸ்கர்யை நம: | |
| ஓம் | லக்ஷ்ம்யை நம: | | ஓம் | பில்வ நிலயாயை நம: | |
| ஓம் | நித்யபுஷ்டாயை நம: | | ஓம் | வராரோஹாயை நம: | |
| ஓம் | விபாவர்யை நம: | 20 | ஓம் | யச'ஸ்வின்யை நம: | 80 |
| ஓம் | அதித்யை நம: | | ஓம் | வஸுந்தராயை நம: | |
| ஓம் | தித்யை நம: | | ஓம் | உதாராங்காயை நம: | |
| ஓம் | தீப்தாயை நம: | | ஓம் | ஹரிண்யை நம: | |
| ஓம் | வஸுதாயை நம: | | ஓம் | ஹேமமாலின்யை நம: | |
| ஓம் | வஸுதாரிண்யை நம: | | ஓம் | தன தான்யகர்யை நம: | |
| ஓம் | கமலாயை நம: | | ஓம் | ஸித்தயே நம: | |
| ஓம் | காந்தாயை நம: | | ஓம் | ஸ்த்ரைண ஸௌம்யாயை நம: | |
| ஓம் | காமாக்ஷ்யை நம: | | ஓம் | சு'பப்ரதாயை நம: | |
| ஓம் | க்ரோதஸம்பவாயை நம: | | ஓம் | ந்ருபவேச்'ம தாநந்தாயை நம: | |
| ஓம் | அனுக்ரஹப்ரதாயை நம: | 30 | ஓம் | வரலக்ஷ்ம்யை நம: | 90 |
| ஓம் | புத்தயே நம: | | ஓம் | வஸுப்ரதாயை நம: | |
| ஓம் | அனகாயை நம: | | ஓம் | சு'பாயை நம: | |
| ஓம் | ஹரிவல்லபாயை நம: | | ஓம் | ஹிரண்ய ப்ராகாராயை நம: | |
| ஓம் | அசோ'காயை நம: | | ஓம் | ஸமுத்ர தனயாயை நம: | |
| ஓம் | அம்ருதாயை நம: | | ஓம் | ஜயாயை நம: | |
| ஓம் | தீப்தாயை நம: | | ஓம் | மங்களாதேவ்யை நம: | |
| ஓம் | லோகசோ'க விநாஷின்யை நம: | | ஓம் | விஷ்ணுவக்ஷ தலஸ்திதாயை நம: | |
| ஓம் | தர்மநிலயாயை நம: | | ஓம் | விஷ்ணுபத்ன்யை நம: | |
| ஓம் | கருணாயை நம: | | ஓம் | பிரஸன்னாக்ஷ்யை நம: | |
| ஓம் | லோகமாத்ரே நம: | 40 | ஓம் | நாராயண மாச்'ரிதாயை நம: | 100 |
| ஓம் | பத்மப்ரியாயை நம: | | ஓம் | தாரித்ரிய வம்ஸின்யை நம: | |

| | |
|---|---|
| ஓம் பத்மஹஸ்தாயை நம:<br>ஓம் பத்மாக்ஷ்யை நம:<br>ஓம் பத்மஸுந்தர்யை நம:<br>ஓம் பத்மோத்பவாயை நம:<br>ஓம் பத்மமுக்யை நம:<br>ஓம் பத்ம நாபப்ரியாயை நம:<br>ஓம் ரமாயை நம:<br>ஓம் பத்மமாலாதராயை நம:<br>ஓம் தேவ்யை நம: 50<br>ஓம் பத்மின்யை நம:<br>ஓம் பத்மகந்தின்யை நம:<br>ஓம் புண்யகந்தாயை நம:<br>ஓம் ஸுப்ரஸன்னாயை நம:<br>ஓம் ப்ரஸாதாபி முக்யை நம:<br>ஓம் ப்ரபாயை நம:<br>ஓம் சந்த்ரவதனாயை நம:<br>ஓம் சந்த்ராயை நம:<br>ஓம் சந்த்ரஸஹோதர்யை நம:<br>ஓம் சதுர்புஜாயை நம: 60 | ஓம் தேவ்யை நம:<br>ஓம் ஸர்வோ பத்ரவ நிவாரிண்யை நம:<br>ஓம் நவதுர்காயை நம:<br>ஓம் மஹாகாள்யை நம:<br>ஓம் ப்ரஹ்ம -விஷ்ணு -<br>சி'வாத்மிகாயை நம:<br>ஓம் த்ரிகாலஜ்ஞானஸம்பந்நாயை நம:<br>ஓம் புவனேஷ்வர்யை நம: 108 |

இதி ஸ்ரீ லக்ஷ்மி அஷ்டோத்தர சத நாமாவளி: ஸம்பூர்ணம்.

# ஸ்ரீ பத்மாவதி அஷ்டோத்தர சத நாமாவளி:

| | | | |
|---|---|---|---|
| ஓம் | பத்மவத்யை நம: | ஓம் | அஷ்டதிக்பாலகாதிபத்யை நம: |
| ஓம் | தேவ்யை நம: | ஓம் | மன்மததர்ப ஸம்ஹாரின்யை நம: |
| ஓம் | பத்மோத்பவாயை நம: | ஓம் | கமலார்தபாகாயை நம: |
| ஓம் | கருணப்ரதாயின்யை நம: | ஓம் | ஸ்வல்பபராதமஹாபராத - |
| ஓம் | ஸஹ்ருதயாயை நம: | | க்ஷமாயை நம: |
| ஓம் | தேஜஸ்வரூபிண்யை நம: | ஓம் | ஷத்கோடிதீர்தவாஸிதாயை நம: |
| ஓம் | கமலமுகை நம: | ஓம் | நாரதாதி முநிஸ்ரேஷ்ட பூஜிதாயை நம: |
| ஓம் | பத்மதராய நம: | ஓம் | ஆதிஷங்கர பூஜிதாயை நம: |
| ஓம் | ஸ்ரீயை நம: | ஓம் | ப்ரீத்திதாயின்யை நம: |
| ஓம் | பத்மனேத்ரே நம: 10 | ஓம் | சௌபாக்யப்ரதாயின்யை நம: |
| ஓம் | பத்மகராயை நம: | ஓம் | மஹாகீர்த்தி ப்ரதாயின்யை நம: 80 |
| ஓம் | ஸுகுணாயை நம: | ஓம் | கிருஷ்ணாதிப்ரியாயை நம: |
| ஓம் | குங்குமப்ரியாயை நம: | ஓம் | கந்தர்வ ஷாபவிமோசகாயை நம: |
| ஓம் | ஹேமவர்ணாயை நம: | ஓம் | க்ரிஷ்ணபத்ன்யை நம: |
| ஓம் | சந்ரவந்திதாயை நம: | ஓம் | திரிலோகபூஜிதாயை நம: |
| ஓம் | தகதகப்ரகாஷ ஷரீர-தாரிண்யை நம: | ஓம் | ஜகன்மோஹின்யை நம: |
| ஓம் | விஷ்ணுப்ரியாயை நம: | ஓம் | ஸுலபாயை நம: |
| ஓம் | நித்யகல்யாண்யை நம: | ஓம் | ஸுஷீலாயை நம: |
| ஓம் | கோடிஸூர்யப்ரகாஷிண்யை நம: | ஓம் | அஞ்சனாஸுதானுக்ரஹப்ரதாயின்யை நம: |
| ஓம் | மஹாசௌந்தர்யரூபிண்யை நம: 20 | ஓம் | பக்தாத்மனிவாஸின்யை நம: |
| ஓம் | பக்தவத்சலாயை நம: | ஓம் | ஸந்த்யாவந்தின்யை நம: 90 |
| ஓம் | ப்ரஹ்மாண்டவாஸின்யை நம: | ஓம் | ஸர்வலோகமாத்ரை நம: |
| ஓம் | ஸர்வவாஞ்ச பலதாயின்யை நம: | ஓம் | அபிமததாயின்யை நம: |
| ஓம் | தர்மஸங்கல்பாயை நம: | ஓம் | லலிதாவதூத்யை நம: |
| ஓம் | தாக்ஷிண்யகடாக்ஷின்யை நம: | ஓம் | ஸமஸ்தஷாஸ்த்ர விஷாரதாயை நம: |
| ஓம் | பக்திப்ரதாயின்யை நம: | ஓம் | ஸுவர்ணாபரனதாரிண்யை நம: |
| ஓம் | குணத்ரயவிவர்ஜிதாயை நம: | ஓம் | இஹபரலோக ஸுகப்ரதாயின்யை நம: |
| ஓம் | கலஷோடஷஸம்யுதாயை நம: | ஓம் | கரவீரனிவாஸின்யை நம: |
| ஓம் | ஸர்வலோகானாம்ஜனந்யை நம: | ஓம் | நாகலோகமனிஸஹா ஆகாஷஸிந்து |
| ஓம் | முக்திதாயின்யை நம: 30 | - | கமலேஷ்வர பூரிதரதகமநாயை நம: |
| ஓம் | தயாம்ருதாயாயை நம: | ஓம் | ஸ்ரீ ஸ்ரீநிவாஸப்ரியாயை நம: |
| ஓம் | ப்ராக்ஞாயை நம: | ஓம் | சந்ரமண்டலஸ்திதாயை நம: 100 |
| ஓம் | மஹாதர்மாயை நம: | ஓம் | அலமேலு மங்காயை நம: |
| ஓம் | தர்மரூபிண்யை நம: | ஓம் | திவ்யமங்கள தாரிண்யை நம: |
| ஓம் | அலங்கார ப்ரியாயை நம: | ஓம் | ஸுகல்யானபீடஸ்திதாயை நம: |
| ஓம் | ஸர்வதாரித்ர்யத்வம்ஸின்யை நம: | ஓம் | காமகவனபுஷ்பப்ரியாயை நம: |
| ஓம் | ஸ்ரீவெங்கடேஷ வக்ஷஸ்தலஸ்திதாயை நம: | ஓம் | கோடி மன்மதரூபிண்யை நம: |
| ஓம் | லோகஷோகவினாஷின்யை நம: | ஓம் | பானுமன்டலரூபிண்யை நம: |
| ஓம் | வைஷ்ணவ்யை நம: | ஓம் | பத்ம பாதாயை நம: |
| ஓம் | திருசானூருபுரவாஸின்யை நம: 40 | ஓம் | ரமாயை நம: |

ஓம் வேதவேத்ய விஷாரதாயை நம:
ஓம் விஷ்ணுபாத ஸேவிதாய நம:
ஓம் ரத்னப்ரகாஷகிரீடதாரின்யை நம:
ஓம் ஜகன்மோஹின்யை நம:
ஓம் ஷக்திஸ்வரூபிண்யை நம:
ஓம் பிரஸன்னோதயாயை நம:
ஓம் இந்ராதி தைய்வத யக்ஷகின்னர - கிம்புருஷ பூஜிதாயை நம:
ஓம் ஸர்வலோகநிவாஸின்யை நம:
ஓம் பூஜயாயை நம:
ஓம் ஐஸ்வர்யப்ரதாயின்யை நம: 50
ஓம் ஸாந்தாயை நம:
ஓம் உன்னதஸ்தானஸ்திதாயை நம:
ஓம் மந்தாரகாமின்யை நம:
ஓம் கமலாகராயை நம:
ஓம் வேதாந்தஜ்ஞானரூபிண்யை நம:
ஓம் ஸர்வஸம்பத்திரூபிண்யை நம:
ஓம் கோடிஸூர்யஸமப்ரபாயை நம:
ஓம் பூஜபலதாயின்யை நம:
ஓம் கமலாஸனாதி ஸர்வதேவதாயை நம:
ஓம் வைகுண்டவாஸின்யை நம: 60
ஓம் அபயதாயின்யை நம:
ஓம் த்ராக்ஷாபலபாயஸப்ரியாயை நம:
ஓம் ந்ருத்யகீதப்ரியாயை நம:
ஓம் க்ஷீரஸாகரோத்பவாயை நம:
ஓம் ஆகாஷராஜ புத்ரிகாயை நம:
ஓம் ஸுவர்ணஹஸ்ததாரின்யை நம:
ஓம் காமரூபிண்யை நம:
ஓம் கருணாகடாக்ஷதாரின்யை நம:
ஓம் அம்ருதாஸுஜாயை நம:
ஓம் பூலோகஸ்வர்க ஸுகதாயின்யை நம: 70

ஓம் ஸர்வலோகஸபான்தர தாரின்யை\ நம:
ஓம் ஸர்வமானஸவாஸின்யை நம: 110
ஓம் ஸர்வாயை நம:
ஓம் விஸ்வரூபாயை நம:
ஓம் திவ்யஞானாயை நம:
ஓம் ஸ்வமங்களரூபிண்யை நம:
ஓம் ஸர்வானுக்ரஹ ப்ரதாயின்யை நம:
ஓம் ஓம்காரஸ்வரூபிண்யை நம:
ஓம் ப்ரஹ்மக்ஞான ஸம்பூதாயை நம:
ஓம் ஸ்ரீ பத்மாவத்யை நம:
ஓம் ஸத்யோ வேதவத்யை நம:
ஓம் ஸ்ரீமஹாலக்ஷ்ம்யை நம: 120

இதி ஸ்ரீ பத்மாவதி அஷ்டோத்தர சத நாமாவளி: ஸம்பூர்ணம்.

## தூபம்

**தஷாங்கம் குக்குலோபேதம் கோக்ஹ்ருதேன ஸமன்விதம் ।**
**தூபம் க்ருஹாண தேவேஷ ஸர்வலோக நமஸ்காரா ॥**
ஸ்ரீ லக்ஷ்மி பத்மாவதி ஸமேத ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸ்வாமினே நம:
தூபமாக்ஹ்ராபயாமி ।
(ஸாம்பிராணி / ஊதுபத்தி காட்டவும்.)

## தீபம்

**த்ரைலோகேஷ மஹாதேவ ஸர்வக்ஞான ப்ரதாயக ।**
**தீபம் தாஸ்யாமி தேவேஷ ரக்ஷமாம் பக்தவத்ஸல ॥**
ஸ்ரீ லக்ஷ்மி பத்மாவதி ஸமேத ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸ்வாமினே நம:
தீபம் தர்ஷயாமி ।
(தீபம் காட்டவும்.)

## நைவேத்யம்

**ஸர்வபாக்ஷ் ய்ச்ச போஜ்ஜைஸ்ச்ச ரஸய்ஷத்பி ஸமன்விதம் ।**
**நைவேத்யந்து மயாநீதம் க்ருஹாண புருஷோத்தம ॥**
ஸ்ரீ லக்ஷ்மி பத்மாவதி ஸமேத ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸ்வாமினே நம: நைவேத்யம் ஸமர்ப்பயாமி ।

(நைவேத்யம், நீங்கள் வாழைப்பழம் ஸமர்ப்பிப்பதாக இருந்தால்"கதளீபலம்", என்றும், தேங்காய் ஸமர்ப்பிப்பதாக இருந்தால் "நாரிகேள பலம் நிவேதயாமி" என்றும், வெல்லம் ஸமர்ப்பிப்பதாக இருந்தால் "குடோபஹார நைவேத்யம் ஸமர்ப்பயாமி" என்றும் சொல்லவும்.)

**ஓம் பிராணாய ஸ்வாஹா, ஓம் அபானாய ஸ்வாஹா, ஓம் வ்யானாய ஸ்வாஹா, ஓம் உதானாய ஸ்வாஹா, ஓம் ஸமானாய ஸ்வாஹா, ஓம் பரப்ரஹ்மணே ஸ்வாஹா,**
(உத்தரணியாலே தீர்த்தம் எடுத்துக் கிண்ணத்திலே ஸமர்ப்பிக்கவும்.)
**ஓம் பூர்புவஸ்ஸுவ: தத்ஸவிதுர்-வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி**
**தியோ யோ ந: ப்ரசோதயாத், ஒமாபோ ஜ்யோதீராபோ அம்ருதம் ப்ரஹ்ம**
**பூர்புவஸ்ஸுவரோம்**
(நைவேத்யம் ஸமர்ப்பிக்கவும்.)

மத்யே மத்யே பாநீயம் ஸமர்ப்பயாமி ।
(உத்தரணியாலே தீர்த்தம் எடுத்துக் கிண்ணத்திலே ஸமர்ப்பிக்கவும்.)

**அம்ருதாபிதானமஸி, உத்தராபோஷனம் ஸமர்ப்பயாமி, ஹஸ்தௌ ப்ரக்ஷாலயாமி, பாதௌ ப்ரக்ஷாலயாமி, புனராச்சமநீயம் ஸமர்ப்பயாமி**

## தாம்பூலம்

**பூகீபல ஸகர்பூரை ர்நாகவல்லீ தளைர்யுதம் ।**
**முக்தாசூர்ண ஸமாயுக்தம் தாம்பூலம் பிரதிக்ருஹ்யதாம் ॥**
ஸ்ரீ லக்ஷ்மி பத்மாவதி ஸமேத ஸ்ரீவெங்கடேஸ்வர ஸ்வாமினே நம: தாம்பூலம் ஸமர்ப்பயாமி ।

## நீராஜனம்

**ஷ்ரிய: காந்தாய கல்யாண நிதயே நிதயேர்த்திநாம் ।**
**ஸ்ரீவேங்கட நிவாஸாய ஸ்ரீ நிவாஸாய மங்களம் ॥**
ஸ்ரீ லக்ஷ்மி பத்மாவதி ஸமேத ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸ்வாமினே நம: நீராஜனம் தர்ஷயாமி ।

(மேல உள்ள மந்திரத்தை ஜபித்த பின், உத்தரணியாலே தீர்த்தம் எடுத்துக் கிண்ணத்திலே ஸமர்ப்பித்து, "புனராச்சமநீயம் ஸமர்ப்பயாமி" என்று சொல்லவும்.)

## மந்த்ரபுஷ்பம்

**ஓம் ஸஹஸ்ர ஸீர்ஷம் தேவம் விஸ்வாக்ஷம் விஸ்வ ஸம்புவம் ।**
**விஸ்வம் நாராயணம் தேவமக்ஷரம் பரமம் பதம் ॥ 1**
**விஸ்வத: பரமாந்நித்யம் விஸ்வம் நாராயணகும் ஹரிம் ।**
**விஸ்வமே வேதம் புருஷஸ் தத்விஸ்வ முபஜீவதி ॥ 2**
**பதிம் விஸ்வஸ்யாத்மேஸ்வரகும் ஸாஸ்வதகும் ஸிவமச்யுதம்।**
**நாராயணம் மஹாஜ்ஞேயம் விஸ்வாத்மானம் பராயணம் ॥ 3**
**நாராயண பரொ ஜ்யோதி ராத்மா நாராயண: பர: ।**
**நாராயண பரம் ப்ரஹ்ம தத்வம் நாராயண: பர: ।**
**நாராயண பரொ த்யாதா த்யானம் நாராயண: பர: ॥ 4**
**யச்ச கிஞ்சிஜ் ஜகத் ஸர்வம் த்ருஸ்யதே ஸ்ரூயதே பிவா ।**
**அந்தர் பஹிஸ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:॥ 5**
**அனந்தமவ்யயம் கவிகும் ஸமுத்ரேந்தம் விஸ்வ ஸம்புவம் ।**
**பத்மகோஸ ப்ரதீகாஸகும் ஹ்ருதயம் சாப்யதோ முகம் ॥ 6**
**அதோ நிஷ்ட்யா விதஸ்த் யாந்தே நாப்யாமுபரி திஷ்டதி ।**
**ஜ்வால மாலாகுலம் பாதீ விஸ்வஸ்யாயதனம் மஹத் ॥ 7**
**ஸந்ததகும் ஸிலாபிஸ்து லம்பத்யா-கோஷ ஸந்நிபம்।**
**தஸ்யாந்தே ஸுஷிரகும் ஸூக்ஷ்மம் தஸ்மின் ஸர்வம் ப்ரதிஷ்டிதம்॥ 8**
**தஸ்ய மத்யே மஹாநக்நிர்-விஸ்வார்ச்சிர்-விஸ்வதோ முக:।**
**ஸோக்ரபுக் விபஜந்திஷ்டந் நாஹாரமஜர: கவி: ।**
**திர்ய-கூர்த்வ-மத: ஸாயீ ரஸ்மயஸ்-தஸ்ய ஸந்ததா ॥ 9**
**ஸந்தாபயதி ஸ்வம் தேஹமாபாததல மஸ்தக: ।**
**தஸ்ய மத்யே வஹ்னி ஸிகா அணீயோர்த்வா வ்யவஸ்தித: ॥ 10**
**நீலதோயத மத்யஸ்தாத் வித்யுல்லேகேவ பாஸ்வரா ।**
**நீவாராஸூகவத் தன்வீ பீதா பாஸ்வத்- யணூபமா ॥ 11**

**தஸ்யாஸ: ஸிகாயா மத்யே பரமாத்மா வ்யவஸ்தித:।**
**ஸ ப்ரஹ்மா ஸ ஸிவ ஸ ஹரி: ஸேந்த்ர: ஸோக்ஷர: பரம ஸ்வராட் ॥ 12**
**ஓம் தத்ப்ரஹ்ம, ஓம் தத்வாயு:, ஓம் ததாத்மா, ஓம் தத்ஸத்யம்,**
**ஓம் தத்ஸர்வம், ஓம் தத்புரோர் நம:**
**ஓம் அந்தஸ்சரதி பூதேஷு குஹாயாம் விஸ்வமூர்திஷு।**
**த்வம் யஜ்ஞஸ்த்வம் வஷட்காரஸ்த்வ மிந்த்ரஸ்த்வம்**
**ருத்ரஸ்த்வம் விஷ்ணுஸ்த்வம் ப்ரஹ்மத்வம் ப்ரஜாபதி: ।**
**த்வம் ததாப ஆபோ ஜ்யோதீ ரஸோம்ருதம்**
**ப்ரஹ்ம பூர்புவஸ்ஸுவரோம்॥13**
**கதா புனஸ் ஸங்க ரதாங்க கல்பக த்வஜ**
**அரவிந்த அங்குச வஜ்ர வஜ்ரலலாஸ்சித**
**ஹே! ஸ்ரீநிவாஸ த்வத் சரணாம்புஸ த்வயம் மதீய மூர்தான மலஜ**
**ஓம் நிரன்ஜனாய வித்மஹே நிராபாஸாய தீமஹி**
**தந்நோ ஸ்ரீநிவாஸ: ப்ரசோதயாத்**
ஸ்ரீ லக்ஷ்மி பத்மாவதி ஸமேத ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸ்வாமினே நம: ஸுவர்ண
திவ்யமந்த்ரபுஷ்பம் ஸமர்ப்பயாமி ।

**இப்பொழுது விரதத் திருக்கதைகள் ஐந்தையும் படிக்கவும்**

# விரதம் திருக்கதை :1

## ஸ்ரீ பகவான் உவாச

கலியுகத்தில், ஒரு புனித திருநாளன்று, ஸ்ரீமன் நாராயணாகிய ஸ்ரீ வெங்கடேச பெருமாள், திருமலை திருப்பதி என்னும் வைகுண்டத்திற்கு ஈடான திவ்ய தேசத்தில், விஸ்வபதி என்னும் தனது அன்பிற்குரிய பக்தன் முன் தோன்றி, தனக்கு பிரியமான ஸ்ரீ வெங்கடேஸ்வர விரத நூலினை, மிக எளிய நடையில் எழுதும்படி அன்புக்கட்டளையிட்டார். அந்த ஸ்ரீ வெங்கடேஸ்வர விரத முறைகளை பற்றி அவரே கீழ்கண்டவாறு எடுத்துக் கூறினார்.

'ஓ விஸ்வபதி'! மக்கள் இன்புற்று வாழ, விரதம் ஒன்று இருக்கின்றது. அந்த விரதத்தின் பெயர்தான் "ஸ்ரீ வெங்கடேஸ்வர விரதம்". எனக்கு மிகவும் பிரியமான இவ்விரதம், உலகப் புகழ்பெற்று அனைவருடைய துயரையும் போக்கி, ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடியது. இந்த எளிமையான விரதத்தினை அனுஷ்டிப்பது மிகவும் சுலபம், இதை யார் வேண்டுமானாலும் செய்யலாம். மக்கள் படும் துயரங்கள் அனைத்தையும், முற்றிலும் அறிந்தவன் நான். மக்கள் தங்களது முற்பிறவியின் கர்ம வினைப்பயன்களையே இப்பிறவியில் அனுபவிக்கிறார்கள் என்னும் இந்த தத்துவத்தை உணராது, மேலும் மேலும் அதே தவற்றினைச் மக்கள் செய்துவருகிறார்கள். இந்த கலியுகத்தில், என்னுடைய பக்தர்கள் பலர், தங்கள் தீய வினைகளைத் தகர்த்து எறிய, பல தடைகளைத் தாண்டி, பல மைல்கள் கடந்து, திருமலை திருப்பதிக்கு வந்து என்னை தரிசித்து, தங்கள் பிணிகளைத் போக்கிக்கொள்கின்றனர். என்னுடைய பக்தர்கள் மீது எனக்கு கொள்ளைப் பிரியம். என்னை முற்றிலும் சரணாகதி அடைந்த பக்தர்களுக்கு, நானே முழு பொறுப்பேற்று, கண் இமை காப்பது போல் அவர்களை பாதுகாக்கிறேன். இவ் விரதத்தைப் பக்தியோடும், சிரத்தையோடும் செய்யும் பக்தர்கள் அனைவரும், தங்களது பிரச்சனைகளிலிருந்து உடனே விடுபடுவர்.

இந்த விரதத்தினை தங்களது நேரம் காலம் பொருளாதார வசதிகளுக்கு ஏற்றவாறு எப்போது வேண்டுமானாலும் செய்யலாம். எனினும் கீழ்க்காணும் நாட்களில் செய்தால் விசேஷம். கார்த்திகை, மார்கழி, மாசி மாதங்களும் அல்லது ஒவ்வொரு மாதத்திலும் வருகின்ற பௌர்ணமி, பஞ்சமி, சப்தமி மற்றும் ஏகாதசி திதிகளும் மற்றும் ஸ்ரவன/ஸ்வாதி நட்சத்திர நாட்களும் இந்த விரத பூஜைக்குரிய சுபதினங்கள் ஆகும்.

இந்த விரதத்தினை அனுஷ்டிப்பதன் மூலம், துன்பம் தீர்ந்து இன்பமும் சந்தோஷமும் பெருகும். கணவன் மனைவியிடையே சந்தோஷம் பெருகும்: ஆரோக்கியம், செல்வ வளம், குடும்ப சந்தோஷம் மற்றும் கல்வியும் வளர்ச்சியடையும். புத்திரபாக்கியம் அற்றவர்களுக்குப் புத்திரபாக்கியம் உண்டாகும். மனைவி தீர்க்க சுமங்கலியாக இருப்பாள். வாழ்க்கையில் ஏற்படும் தடைகளெல்லாம் இந்த விரதத்தால் தவிடு பொடியாக்கும், எல்லையில்லா மன அமைதி கிட்டும். வேலை வாய்ப்பு / வணிகம் முதலியவற்றில் நல்ல உயர்வும், முன்னேற்றமும் மற்றும் அஷ்ட ஐஸ்வர்யங்களும் வந்து சேரும். எனவே இவ் விரதத்தை ஒவ்வொருவரும் அனுஷ்டிக்க வேண்டும். இந்த விரதத்தினை காலை அல்லது மாலையில் செய்யலாம் .

இந்த விரதத்தினை எந்த ஒரு புனித நாட்களிலும் அவரவர்கள் இல்லத்தில் செய்யலாம். இந்த விரதத்தில் ஐந்து கதைகள் உள்ளன. இவை அனைத்தையும்

பக்தியுடனும் சிரத்தையுடனும் படிக்க வேண்டும். இந்த விரதத்தினை வீடு, கோவில், புண்ணிய நதிக்கரை என்று எந்த தூய இடத்திலும் செய்யலாம்.

முடிந்த வரை நண்பர்கள், உற்றார் உறவினர்கள் அனைவரையும் வரவழைத்து, இந்த விரத்தினைச் செய்வது மிகச் சிறந்தது. பூஜை முடிந்ததும், பிரஸாதங்களை முக்கியமாகப் பூஜை அனுஷ்டிப்பவர்கள் தானும் சாப்பிட்டு, பூஜையைக் கண்ணுற்றவர்களுக்கும் அன்புடன் கொடுக்க வேண்டும். இந்த மஹா பிரஸாதத்தினை உண்ணும் பக்தகோடி மக்கள் சகல சௌபாக்யங்களையும், ஆனந்தங்களையும் பெறுவர்.

கடந்த காலத்தில், மிகச்சிறந்த மகான்கள் பலர் இந்த விரத்தினை அனுசரித்து, என்னுடைய அருளை பரிபூரணமாக பெற்றுள்ளார்கள். கடின தவவலிமையால் மட்டுமே கிடைக்கக் கூடிய அரும்பலன்கள் யாவையும் இந்த எளிய விரதத்தின் மூலம் அடையலாம்.

பூஜை செய்வதற்கு முன்னால் வீட்டை சுத்தப்படுத்தி, பூஜைக்குரிய இடத்தை சுத்தம் செய்து கோலமிட்டு, மேடை அமைத்து அலங்கரிகத்துக் கொள்ளவும். அதில் எனது படத்தையோ அல்லது விக்ரஹத்தையோ (ஸ்ரீதேவி/பூதேவியுடன் இருப்பது மிகச் சிறப்பு) எழுந்தருளச் செய்யவும். உங்களுடய பிரியமான இதர தெய்வங்கள் படம்/விக்ரகம் முதலியன வைத்துக் கொள்ளலாம். முழுமுதற் கடவுளான விநாயக பெருமானை வணங்கி, மனதிற்குள் அஷ்டதிக் தேவதைகளையும், நவக்ரஹ தேவதைகளையும் வழிபாடு செய்து கொள்ளவும். பின்னர் இந்த ஐந்து கதைகளையும் படிக்க வேண்டும். இது முதல் கதை. இதர நான்கு கதைகள் விஸ்வாமித்ரர், வஷிஷ்டர், பாரத்வாஜர், அத்ரி முதலிய மிகப் பெரும் தவ வலிமை பொருந்திய ரிஷிகள் கூறி அருளியனவாகும்.

ஒவ்வொரு கதை முடிந்தவுடன் 'கோவிந்தா ... கோவிந்தா ... கோவிந்தா...என்று, மும்மூன்று முறை நமஸ்கரிக்கவும். ஏதோ ஒரு சில காரணத்தினால், மேற்கூறியவாறு விரதம் செய்ய முடியாமல் போனால், என்னுடைய விக்ரகமோ / படமோ வைத்து, அதன் முன்னர் அமைதியாக அமர்ந்து இந்த விரத்தினை அனுசரிக்கலாம். முதலில் விநாயகர் வழிபாடு, பின்னர் அஷ்டதிக் பாலகர் வழிபாடு, நவக்ரஹ வழிபாடு செய்யவும். பின்னர் துளசி, தேங்காய், புஷ்பம், பழங்களைத் தட்டில் வைத்துக் கொள்ள வேண்டும். அதன் பிறகு என்னை வணங்கி இந்த விரதத்தில் உள்ள கதைகளைப் படித்துக் கொள்ளவும். முடிவில் தேங்காய், புஷ்பம், பழங்களை எனக்கு நைவேத்தியம் செய்து அதை உட்கொண்டால் உங்களுடைய எல்லா கஷ்டங்களும் தீர்ந்து விடும். நானே நேரில் வந்து பிரஸாதங்களை ஏற்றுக் கொள்வேன். என் அனுக்ரகம் அனைவருக்கும் எப்போதும் உண்டு.

உண்மையான பக்தி-சிரத்தையுடன் இந்த விரதத்தை மேற்கொள்ளும் பக்தர்கள் அனைவரும், வாழ்வில் சகல ஐஸ்வர்யங்களையும் பெற்று, தன் குடும்பத்தோடும், உறவினர்கள் மற்றும் நண்பர்களோடும் வாழ்ந்து, உலகில் அடைய வேண்டிய அத்தனை நன்மைகளையும் அடைந்து, கடைசியில் மோக்ஷமெனும் சாம்ராஜ்யத்தை அடைவது திண்ணம், என்று பகவான் கூறி முடித்தார்.

இந்த கதையினை பெருமாளே, திம்மராஜ விஸ்வபதி என்னும் பக்தருக்கு திருமலையில் அருளியுள்ளார். இந்த ஸ்ரீ வெங்கடேஸ்வர விரத்தினை நாம் எல்லாரும் அனுஷ்டித்து, அந்த வேங்கடநாதனின் கிருபா கடாக்ஷத்தினைப் பெறுவோமாக! *முதல் கதை ஸம்பூர்ணம்.*

கோவிந்தா ! கோவிந்தா ! கோவிந்தா ! .

**ஷ்ரிய: காந்தாய கல்யாண நிதயே நிதயேர்த்திநாம் ।**
**ஸ்ரீவேங்கட நிவாஸாய ஸ்ரீ நிவாஸாய மங்களம் ॥**

# விரதம் திருக்கதை :2

## ஸ்ரீ விஸ்வாமித்திரர் அருளிய திருக்கதை

மாபெரும் ப்ரம்மரிஷி விஸ்வாமித்திரர் க்ருபையால் இக்கதை சொல்லப்படுகிறது . கலியுகத்தில் வாழும் மக்களே !ஸ்ரீநிவாச பெருமானிடம் பக்திகொண்ட பக்தக்கோடி பெருமக்களே நீங்கள் செய்யும் !ஸ்ரீ வேங்கடேச பெருமானின் விரத பூஜை மிகப்புனிதமானது . ஸ்ரீமன் நாராயணன் அனுக்ரகத்தை , நாம் பெறுவதற்கான பெரும் திசைக்காட்டியே ஸ்ரீ வெங்கடேஸ்வர விரதம் .

பழங்காலத்தில் ஸ்ரீமன் நாராயணனிடம் பக்திகொண்ட பக்தகோடி பெருமக்கள் இப்புனித விரதத்தைக் கடைப்பிடித்து பெரும் பாக்கியங்களைப் பெற்றவர்கள். உலக மக்களுக்கும், கடவுளுக்கும், தேவர்களுக்கும் ஸ்ரீவெங்கடேஸ்வர விரத மஹிமையை எடுத்துக்காட்டிய ஸ்ரீவேங்கடேச பெருமாளுக்கு நாம் என்றும் வாழ்த்துக்கள் கூறி நம் நன்றிக் கடனைச் செலுத்துவோமாக.

பலவருஷங்களுக்கு முன், மகத இராஜ்ஜியத்தில் வேங்கடேச பெருமானிடம் பக்திகொண்ட விஷ்ணுசித்தன் என்ற பக்தன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு ஒன்பது புத்திரிகள். விஷ்ணுசித்தன் நன்கு படித்தவன். ஆனால் அவன் வறுமையின் கொடுமையால் வாடினான். அவனுடைய மனைவி தாராமதி ஸ்ரீமன் நாராயணனிடம் அளவுக்கு மேல் பக்தி கொண்டவள். ஸ்ரீமன் நாராயணன் திருவடியில் தன்னையே அர்ப்பணித்த பக்தசிகாமணி. குறைந்த சம்பளத்தால் வறுமையில் வாடிய இத்தம்பதிகள் மற்றவீடுகளில் பூஜை செய்தும், கல்யாண விசேஷ காலங்களிலும், புனித விசேஷ திருநாட்களிலும் பூஜைகள் செய்து தங்கள் வருமானத்தைப் பெருக்கினர். அவர்களுடைய புத்திரிகள் அனைவரும் கல்யாண வயதை அண்டினர். தனது புத்திரிகளின் கல்யாணத்தைப் பற்றி கவலைப்பட்டுக் கொண்டு இருந்த தாராமதி ஸ்ரீநிவாச பெருமானின் திருவடியே துணை என்று சரண்புகுந்தாள்.

ஸ்ரீநிவாச பெருமானிடம் பக்திகொண்ட பக்தர்களே ! நாம் அவன் திருப்பாதத்தைச் சரணடைந்தால், அவன் தன் அளவில்லாத அன்பால் அரவணைத்து நம்மை திக்குமுக்காடச் செய்வான் என்பது நிச்சியம் .

ஒரு மஹாபூர்ணிமா நாள். அன்று காலை ஒரு வயோதிக பிராமணன் வந்து விஷ்ணுசித்தன் வீட்டுக்கதவைத் தட்டி “நான் ஒரு வங்க தேசத்தவன். யாகம் ஒன்று செய்ய யாத்திரை செய்கிறேன். இன்று இரவிலிருந்து நாளை காலை நான் செல்லும் வரை, தங்கள் இல்லத்தில் தங்குவதற்கு அனுமதிதர வேண்டும்” என்று கேட்டார். அதைக்கேட்ட விஷ்ணுசித்தன் அந்த வயோதிக பிராமணனைப் பார்த்து “ ஐயா ! இது என் பெரும் பாக்கியம். விருந்தாளியின் வடிவில் வந்த தாங்கள், என் ஸ்வாமி ஸ்ரீமன் நாராயணனே” என்று சொல்லி, ஒருசிறிதேனும் சந்தேகப்படாமல் அந்த வயோதிக பிராமணனை வீட்டிற்குள் அழைத்துச்சென்றான்.

மதியம் உணவு அருந்தியதும் அந்த வயோதிகன் தாராமதியைப் பார்த்து “ஏன் அம்மா வருத்தத்துடன் இருக்கிறாய் ? உன் துக்கத்திற்கான காரணம் என்ன ? தயங்காமல் என்னிடம் சொல்லம்மா” என்று சொன்னார். அது கேட்ட தாராமதி “ஸ்வாமி ! மகிமை மிகு புனித நோன்புகளை மேற்கொள்ளும் தாங்கள், தேஜஸ்மிகு திருமேனியை உடைய ஸ்ரீ வேங்கடேச பெருமாளைப்போல்

காட்சி அளிக்கிறீர்கள். தங்களிடம் ஒன்றையும் நான் மறைக்க விரும்பவில்லை. என் புத்திரிகளது கல்யாணம் பற்றிய கவலையே என்னை வாட்டுகிறது" என்றுசொன்னாள்.

அதைக் கேட்டு சிரித்த அந்த பிராமண வயோதிகன் "உனது கவலையை நான் அறிந்தேன். உன் கவலை எல்லாம் விலகி, உன் கஷ்டமெல்லாம் நீங்கி, கல்யாண சுப காரியங்கள் பெருகி, வளமான வாழ்க்கையை அடைய, மிக எளிதாய் செய்யக் கூடிய ஸ்ரீ வெங்கடேஸ்வர விரதத்தைக் கடைப்பிடிப்பாய்" என்று சொன்னார். அவர்களுக்கு இந்த விரதத்தை கடைப்பிடிக்கவேண்டிய வழிமுறைகளையும் விளக்கமாக எடுத்துக் கூறினார்.

விரதத்தைக் கடைப்பிடிக்கும் வழிமுறைகளைக் கேட்டதும், விஷ்ணுசித்தன் உள்ளம் களித்து அந்த பிராமண வயோதிகனுக்கு தன் நன்றியைத் தெரிவித்தான். விஷ்ணுசித்தன் கால தாமதம் செய்யாமல் உடனே ஸ்ரீ வெங்கடேஸ்வர விரதத்தைத் தொடங்க நினைத்தான். மஹாபூர்ணிமா நாள் அன்று விரதத்தை தொடங்கினான். ஸ்ரீ வெங்கடேஸ்வர விரதம் தொடங்குவதற்கு மஹாபூர்ணிமா நாளே சிறந்த நாள். அன்று மாலை, பக்திபெருக்கொடு விஷ்ணுசித்தன்,தன் மனைவி தாராமதி, புத்திரிகளுடன், பூஜையை பக்தி சிரத்தையுடன் செய்யத் தொடங்கினான். இப்பூஜைக்கு அவர்களுடைய உறவினர்களையும் மற்றும் நண்பர்களையும் அழைத்திருந்தார்கள். பூஜை முடிந்ததும் பிரசாதத்தை வாங்கிக் கொண்டு உறவினர்களும், நண்பர்களும் அவரவர்கள் வீட்டிற்குச் சென்றனர்.

பூஜை முடிந்ததும் விஷ்ணுசித்தனும் அவன் மனைவி தாராமதியும் தங்கள் நன்றியைத் தெரிவிக்க அந்த வயோதிக பிராமணன் காலில் விழுந்து நமஸ்காரம் செய்து, அவரை ஆசீர்வதிக்கும்படி கேட்டனர் .

வயோதிக பிராமணன் பிரசாதத்தை வாங்கிக் கொண்டபின் அத்தம்பதிகளை ஆசீர்வதித்து , "உங்கள் ஆசைகள் அனைத்தும் பூர்த்தியாகி, உங்கள் குடும்பத்திற்கு ஸ்ரீலக்ஷ்மி ஸ்ரீநிவாசனின் அனுக்ரகம் பெருகட்டும்" என்று வாழ்த்தினார் .

அன்று இரவு அந்த வயோதிக பிராமணன் படுத்து தூங்குவதற்கு ஒரு கிழிந்த போர்வையை விஷ்ணுசித்தன் கொண்டு வந்து கொடுத்து "பெரியவரே! என்னை மன்னிக்க வேண்டும். வறுமையின் கொடுமையால் என்னிடம் கிழிந்த போர்வை மட்டுமே உள்ளது. கிழிந்த போர்வையைக் கொடுத்ததற்கு மன்னிக்க வேண்டும்" என்று மனமுருகி சொன்னான். அந்த வயோதிக பிராமணன் விஷ்ணுசித்தனிடம் "இந்த கிழிந்தபோர்வைக் கொடுத்ததிற்கு வருந்தாதே" என்று சொல்லி, அந்த இடத்தில் படுக்காமல் திண்ணையில் சென்று படுத்துத் தூங்கினார். மற்றவர்களும் வீட்டிற்குள் சென்று படுத்துறங்கினர். அன்று இரவு பலத்த காற்று, மின்னல், இடியுடன் பெரும் மழை பெய்யத் தொடங்கியது. கும்மிரிட்டு இரவில் எதையுமே பார்க்கமுடியவில்லை. விஷ்ணுசித்தனும் அவன்மனைவி, புத்திரிகளும் திண்ணையில் படுத்து உறங்கும் வயோதிக பிராமணனை நினைத்து கவலையோடு இருந்தனர். அவர்கள் அனைவரும் சூரிய உதயத்திற்காகக் காத்துக் கொண்டு இருந்தனர்.

காலையில் மழையும் நின்றது. விஷ்ணுசித்தனும் அவன் குடும்பத்தாரும் அந்த வயோதிக பிராமணனை நினைத்து திண்ணைக்கு வர, அங்கு அவரைக் காணவில்லை. கிழிந்த போர்வை பட்டு பீதாம்பரமாய் காட்சி அளிக்க, அதன்மீது ஸ்ரீவேங்கடேச பெருமாளின் மூர்த்தி இருக்கக் கண்டு மெய்சிலிர்த்து, உடல் புல்லரிக்க வந்திருந்த வயோதிக பிராமணர் சாக்ஷாத் ஸ்ரீமன் நாராயணனே என்று அறிந்து எல்லையற்ற மகிழ்ச்சிக் கடலில் தத்தளித்தனர்.

பூஜைக்காக வந்திருந்த விருந்தாளிகள் அனைவரும் தாங்கள் பார்த்த அந்த வயோதிக பிராமணர் சாக்ஷாத் ஸ்ரீமன் நாராயணனே என்று அறிந்து, காணக்கிடைக்காத காட்சியைக் கண்டு களித்தோமே என்று மனம் களித்து மெய்சிலிர்த்தனர்.

என்னே அதிஷ்டம்! எண்ணிலடங்காத பிறவியின் புண்ணியம் அல்லவா இது. “வந்தது இறைவன், அவனது திருவிளையாடலை அறியும் சக்தியும் இல்லாமல் போயிற்றே. அந்த இறைவனுக்குக் கிழிந்த போர்வையும் கொடுத்தேனே” என்று மனம் வருந்தி, விஷ்ணுசித்தனும் அவன் குடும்பத்தாரும் ஸ்ரீ வேங்கடேச மூர்த்தியைப் பிராத்தனை செய்து வீட்டிற்குள் அம்மூர்த்தியை எடுத்து செல்ல, வீடு பொன்மாளிகையாக மாறிட, எங்கும் செல்வமும், பொன்னும் குவிந்தன. விஷ்ணுசித்தன், தாராமதி அவர்கள் புத்திரிகள் அனைவரும் ஸ்ரீவேங்கட நாதனைப் போற்றிப் பணிந்தனர்.

தங்கள் உயர்வுக்குக் காரணம் ஸ்ரீ வெங்கடேஸ்வரர் விரதமே என்று உணர்ந்தனர். கருணையின் திருவுருவே அந்த இறைவன் ! மாறுவேடத்தில் பக்தன் வீட்டிற்கு விருந்தாளியாக வந்தவனும் அவனே ! ஸ்ரீ வெங்கடேஸ்வர விரதம் செய்யும் முறையை எடுத்துச்சொல்லி பக்தன் தந்த பிரசாதத்தையும் ருசித்து உண்டவனும் அவனே ! அவன் ஒரு பெரும் கருணைக் கடல் ! உண்மை பக்தியோடு ஸ்ரீவேங்கடநாதனை பூஜித்து விரதம் இருக்கும் இல்லங்களில் எல்லாம் அவன் நிச்சியம் குடியிருப்பான். பக்த பெருமக்களே ! ஸ்ரீவேங்கடேசன் அனுக்ரகத்தைப் பெற்று அனுபவிக்க , அனுசரியுங்கள் ஸ்ரீ வெங்கடேஸ்வர விரதத்தை! “ஸ்ரீலக்ஷ்மி ஸ்ரீநிவாச கடாக்ஷ சித்திரஸ்து” (நீங்கள் ஸ்ரீலக்ஷ்மி ஸ்ரீநிவாச அருளை அடைவீர்கள்)

இரண்டாம் கதை ஸம்பூர்ணம்.
கோவிந்தா ! கோவிந்தா ! கோவிந்தா !

**ஷ்ரிய: காந்தாய கல்யாண நிதயே நிதயேர்த்திநாம் ।**
**ஸ்ரீவேங்கட நிவாஸாய ஸ்ரீ நிவாஸாய மங்களம் ॥**

# விரதம் திருக்கதை :3

# ஸ்ரீ வசிஷ்ட மாமுனிவர் அருளிய திருக்கதை

ஸ்ரீமன் நாராயணன் திருவருளைப் பெற்ற ஸ்ரீ வசிஷ்ட மாமுனிவர் அவர்களது க்ருபையால் இக்கதைச் சொல்லப்பட்டது. கலியுகத்தில் வாழும் மக்களே ! ஸ்ரீமன் நாராயணன் அனுக்ரகம் பெறும் பக்தகோடி பெருமக்களே ! வைகுண்டத்தில் உள்ள சக்தி வாய்ந்த நாராயணனே திருமலா திருப்பதியில் வாஸம் செய்யும் ஸ்ரீ வெங்கடேஸ்வரர். அவர் பக்தகோடி மக்களின் துயர்களையும் கஷ்டங்களையும் துடைப்பதற்காக திருவேங்கட மலையில் திரு அவதாரம் எடுத்தவர். அந்த ஸ்ரீ வெங்கடேசப் பெருமானைக் களிக்கச் செய்யும் விரதம் ஸ்ரீ வெங்கடேச விரதம்.

இந்த விரதத்தை அனுசரிக்கும் முறையும் மிக எளிதானது. இந்த விரதம் இறைவனை மிகவும் மகிழ்விக்கக்கூடியது விரதம் ஆகும். இந்த விரதத்தை நம்பிக்கையோடும் பக்தியோடும் கடைப்பிடிக்கும் பக்தகோடி மக்கள் சகலவித நன்மைகளையும் பெற்று பெருவாழ்வு வாழ்வர். பல்லாண்டுகளுக்கு முன், அவந்தி என்னும் இராஜ்ஜியத்தில் பாக்யநகரம் என்னும்பெயர் கொண்ட நகரம் ஒன்று இருந்தது. நகரத்தின் பெயருக்கேற்ப அவ்வூரில் வாழ்ந்த மக்கள் யாவரும் செல்வப் பெருவளத்துடன் வாழ்ந்தனர். அங்குள்ள செல்வந்தர்கள் தங்களது பெருஞ்செல்வத்தால் செருக்கோடு வாழ்ந்தனர்.

அவர்கள் வறுமையிலும், எளிமையிலும் வாடிய ஏழை மக்களை மிகக் கேவலமாகவும், அவமரியாதையாகவும் நடத்தினர். செல்வம் ஒன்றே பெரிதென எண்ணிய செல்வந்தர்கள் இறைவனைத் தொழுவதைக் கைவிட்டனர். கோவிலுக்குச் செல்வதையும், நல்ல நாட்களில் இறைவனைத் தொழுவதையும் கைவிட்டனர். ஆடம்பரமும், அகம்பாவமும் கொண்ட அந்த செல்வந்தர்களின் அகக்கண்களைத் திறந்து, பக்திமார்க்க வழியில் அவர்கள் புத்தி செல்ல ஸ்ரீமன் நாராயணன் திருவுளம் கொண்டார்.

ஒருநாள் செல்வந்தர்கள் அனைவரும் விருந்திற்காக ஒன்றுகூடி குடித்துக்கொண்டும், ஆடிக்கொண்டும் சந்தோஷமாக இருந்தனர். அந்த நகரத்தின் கிழக்கு எல்லையில் ஸ்ரீ லக்ஷ்மி நாராயணர் கோயில் ஒன்று உள்ளது. அக்கோவிலில் விளக்கு ஏற்றுவதற்கு ஒருவரும் இல்லை. மாதத்தின் பதினோராவது நாளான (இது மிகச்சிறந்த புனித நாள்) ஏகாதேசி திருநாள் அன்று, கோவிலில் இருக்கும் மூர்த்தியை அலங்காரம் செய்யவும், பூஜை செய்யவும் ஒருவரும் இல்லை.

அவ்வூர் செல்வந்தர்களுக்கு நல்ல ஒரு பாடம் கற்பிக்க வேண்டும் என்று இறைவன் சித்தம் கொண்டு, அந்நகரை இருண்ட கருமேகங்களால் சூழ வைத்து , எதிர்பாராத மின்னல் இடி முழக்கத்துடன் பெரும்மழையை இரவு முழுவதும் பெய்ய வைத்து, அந்நகரத்தையே தண்ணீரில் மூழ்கடிக்க வைத்து, எத்தனையோ வீடுகளையும் அழித்து நாசமாகச் செய்தார்.

பணக்கார தொழில் அதிபர்களின் கட்டிடங்கள் அனைத்தும் அழிந்து, அவர்களது செல்வங்கள் அனைத்தும் தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டன. அவர்கள் அணிந்திருந்த ஆடைகளைத் தவிர அத்தனைச் செல்வங்களையும் இழந்தனர். அத்தனைச் செல்வங்களைத் தாங்கள் ஏன் இழந்தோம் என்று அந்த செல்வந்தர்ளுக்குப் புரியவில்லை. தாங்கள் செல்வங்களை இழப்போம் என்று அவர்கள் நினைத்ததும் இல்லை. ஆனால் செல்வத்தை எல்லாம் இழந்த செல்வந்தர்கள் அதிசய நிகழ்ச்சியைக் கண்கூடாய் கண்டனர். நகரத்தின் எல்லையில் உள்ள குடிசைகள்

ஒன்றினையும் கடும் மழையோ, கொடுமையான காற்றோ ஒன்றும் நெருங்கவும் இல்லை , பாதிக்கவும் இல்லை. அங்கு இருந்த மக்கள் ஒருவரும் பாதிக்கபடவில்லை. அவர்கள் அனைவரும் பாதுகாப்பாகவும், சந்தோஷமாகவும் முன்னர் எப்படி இருந்தார்களோ அதே போல் இருந்தார்கள். இதைக் கண்ட செல்வந்தர்களுக்குப் பெருத்த அதிர்ச்சி. செல்வந்தர்கள் இவ்வாறு நினைத்துக் கொண்டு இருக்கும் போது பெரும் மின்னல் ஒளி தோன்றி , "அறிவில்லாத மக்களே ! செல்வம் ஒன்று மட்டுமே உங்களது பெரும் சந்தோஷம் என்று நினைத்து , அத்தனையும் இன்று இழந்து நிற்கின்றீர்கள். குடிசையில் வாழும் தேவய்யா ஒரு சாதாரண ஏழை. என்னையே நம்பித் தொழும் பக்தன். அவன் எப்போதும் லக்ஷ்மி நாராயணனர் கோவிலுக்குச் சென்று ஒவ்வொரு நாளும் விளக்கு ஏற்றுபவன். அவன் ஒவ்வொரு ஏகாதேசி அன்று ஸ்ரீ வெங்கடேச விரதத்தை அனுசரிப்பவன்.

அந்த விரதத்தின் மஹிமையால் குடிசையில் வாழ்ந்த மக்களும் தேவய்யாவும் காப்பாற்றப்பட்டார்கள். நீங்களும் பக்தி சிரத்தையுடன் இவ்விரதத்தைக் கடைப்பிடித்தீர்கள் என்றால், திரும்பவும் இழந்த உங்கள் செல்வங்களை மீண்டும் பெற்று சுக வாழ்வு அடைவீர்கள் " என்று அசரீரி முழங்கியது.

இதைக் கேட்ட ஜனங்கள் ஒன்று கூடி , உடனே கோயிலுக்கு சென்று, விரதத்திற்குத் தேவையான பொருட்களை எடுத்துக் கொண்டு, முறைப்படி வெங்கடேச விரதத்தைக் கடைப்பிடித்தனர். இவ்விரத மஹிமையால் இழந்த வீடுகள், செல்வங்கள் எல்லாம் மீண்டும் பெற்று, மிகக் களிப்படைந்தனர்.

அன்று முதல் எல்லா வீடுகளில் உள்ள மக்களும், தொழில் அதிபர்களும் ஏகாதேசி அன்று பக்தி சிரத்தையுடன் ஸ்ரீ வெங்கடேச விரதத்தைப் போற்றிக்கடைப்பிடித்து, சகல சௌவ்பாக்யங்களும் பெற்று, கடைசியில் முக்தி அடைந்து, இறைவன் திருப்பதம் அடைந்தனர். ஸ்ரீவசிஷ்ட மாமுனிவர் அருளிய கதையைக் கேட்ட நாமும் சகல சௌபாக்கியங்களைப் பெற்று முக்தி அடைய, ஒவ்வொரு ஏகாதேசி அன்றும் ஸ்ரீ வெங்கடேஸ்வர விரதத்தை கடைப்பிடிப்போமாக!

*மூன்றாம் கதை ஸம்பூர்ணம்.*
கோவிந்தா ! கோவிந்தா ! கோவிந்தா !

**ஷ்ரிய: காந்தாய கல்யாண நிதயே நிதயேர்த்திநாம் ।**
**ஸ்ரீவேங்கட நிவாஸாய ஸ்ரீ நிவாஸாய மங்களம்**

# விரதம் திருக்கதை :4

## ஸ்ரீ பரத்வாஜர் அருளிய திருக்கதை

ஸ்ரீ பரத்வாஜர் மாமுனிவரின் க்ருபையால் இக்கதை சொல்லப்படுகிறது .

கலியுகம் வாழ் பெருமக்களே! ஸ்ரீமன் நாராயணன் அருளைப் பெறும் பக்தக்கோடி பெருமக்களே ! நீங்கள் செய்யும் ஸ்ரீ வெங்கடேஸ்வர விரதம் மிகப் புனிதமானது. உங்களது கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கும், வேங்கடேசப் பெருமானின் அருளைப் பெறுவதற்குமான சுலபமானவழி இந்த ஸ்ரீ வெங்கடேஸ்வர விரதமே.

அவரது அனுக்ரகத்தை நாம்பெற, கருணையின் திருவுருவாகத் திருவேங்கடத் திருமலையில் ஸ்ரீநிவாசராகத் திருஅவதாரம் எடுத்துள்ளார். முற்பிறவியின் நல்ல பலன்கள் உங்களுக்கு இருக்குமென்றால், நிச்சியம் அந்த திருவேங்கட மலையில் நீங்கள் கால் அடிகள் வைக்க முடியும். முற்பிறவியின் நல்லபலன்கள் ஒன்றும் இல்லை என்றால் உங்களால் அந்த திருவேங்கட நாதனைத் தரிசிக்க முடியாது. அதே போல் முற்பிறவியின் நல்ல பலன்கள் ஒன்றினால் தான் நீங்கள் ஸ்ரீ வெங்கடேஸ்வர விரதத்தை அனுசரித்து, அந்த ஸ்ரீ வெங்கடேஸ்வரர் அனுக்ரகத்தைப் பெற முடியும். இவ்விரதத்தை அனுசரிக்கும் பக்தர்களுக்கும், அதைக்கேட்டு பக்தி பரவசமாகும் பெருமக்களுக்கும், பிரசாதத்தைச் சுவைக்கும் அருமைமிகு பெருமக்களுக்கும் அந்த ஸ்ரீ வெங்கடேஸ்வரரின் திருவருள் கிட்டும். அவர்களே அந்த இறைவனின் திருவருளைப் பெறும் அதிஷ்டசாலிகள். முன்னொரு காலத்தில் “நகாரி” என்னும் ஒரு கிராமம் இருந்தது. அங்கு “தனகுப்தன்” என்ற வியாபாரி வாழ்ந்து வந்தான். அவன் ஒரு உலோபி, பேராசைக்காரன். அவனிடம் எக்கசக்கமாக பணம் மிகுந்திருந்தது. பணம் அவனிடம் எவ்வளவு சேர்ந்திருந்தாலும், கூடவே நிறைய கஞ்சத்தனமும் கூடியிருந்தது. பணம் ஒன்றே பெரிதென நினைத்த அவனை, கர்வமும் அகம்பாவமும் சூழந்து கொண்டது. கர்வம் வந்துவிட்டால், அது மிகச் சிறந்த மனிதனையும் அழிவிற்க்கு கொண்டு செல்லும். அவன் மனைவி காந்திமதி இறைவன் மீது அளவற்ற பக்தி கொண்டவள்.

அவர்களுக்கு மூன்று பெண் குழந்தைகள். கடைசிப் பெண் குமாரி தெய்வபக்தியில் சிறந்தவள். இறைவன் நம்பிக்கையற்ற தன் தந்தைக்குத் தெரியாதபடி, அவள் ஸ்ரீநிவாச பெருமானைப் பிராத்தனைச்செய்து, சந்தர்ப்பம் கிடைக்கும் சமயங்களில் எல்லாம் கோவிலுக்குச் சென்று இறைவனைத் தரிசனம் செய்து, இறைவழிபாடு முடிந்ததும் பிரசாதத்தை வீட்டிற்கு எடுத்து வந்து, தந்தைக்குத் தெரியாமல் மற்ற யாவருக்கும் கொடுப்பாள். காந்திமதி தனது கணவன் தனகுப்தனின் விசித்திர நடத்தையால் மனம் மிக நொந்தாள்.

ஒருநாள் குமாரி தன் சிநேகிதி வீட்டில் நடந்த ஸ்ரீவெங்கடேச பெருமானின் விரத பூஜைக்குச் சென்று, பூஜை முடிந்தபின் மகிமை மிகுந்த விரதக் கதைகளையும் கேட்டாள். மதியம் பன்னிரெண்டு மணிக்கு பூஜை முடிவடைந்தது. குமாரி அவ்வீட்டில் விரதப் பிரசாதத்தைச் சாப்பிட்ட பின், தன் வீட்டில் உள்ளவர்களுக்காக விரத பிரசாதத்தை எடுத்து வந்தாள்.

வெய்யிலின் கொடுமை தாங்க முடியவில்லை. பாதி வழி தூரம் நடந்து வந்த குமாரி, தனக்கு ஏற்பட்ட தாகத்தைத் தணிக்க, ஏதேனும் குடிக்க வேண்டும் என்று நினைத்தாள். தன் தந்தையின் கடை அருகில் இருப்பதை உணர்ந்து அங்கு

சென்று தண்ணீர் குடித்து, அப்பாவின் கோபத்திற்கு அஞ்சி அக்கடையை விட்டு உடன் நடையைக் கட்டினாள். வரும் வேகத்தில் மறந்து போய் ஸ்ரீ வெங்கடேஸ்வர விரதப் பிரசாதத்தைக் கடையிலே விட்டுவிட்டு வீடு வந்து சேர்ந்தாள்.

இதற்கிடையில் அப்பாவின் கடை இருந்த தெருவில் பெரும் குழப்பமும் கலாட்டாவும் ஏற்பட்டது. அந்தத் தெருவில் மக்களின் அழுகை ஒலி அதிகரித்து, என்ன செய்வது என்று தெரியாமல் மக்கள் இங்கும் அங்குமாக ஓடித் திரிந்து கொண்டிருந்தார்கள். அதற்குக் காரணம் பயங்கர நெருப்பு எங்கும் பரவி, கடைகளும் தெருக்களும் நெருப்பில் கரிந்து சாம்பலாகிக் கொண்டிருந்தன. மதியம் பன்னிரெண்டு மணியாய் இருந்ததால் வெய்யிலின் கொடுமையோடு சேர்ந்து நெருப்பு சூட்டுக் கொடுமையும் இணைந்து அவ்விடம் வெப்பத்தின் கொடுமையைத் தாங்க முடியாமல் இருந்தது. தனகுப்தன் தன்கடை தன்கண் முன் எந்த நிமிஷத்திலும் நெருப்பிற்கு இரையாகி சாம்பலாகப் போகிறதே என்று வருந்தி, உடல் நடுங்கிக் கொண்டு இருந்தான். பெருந்தீயின் வேகத்தைக் கண்டு அதிர்ச்சி அடைந்த அவன் கைகள் பயத்தால் நடுங்கத் தொடங்கின. அவன் கடையில் இருந்த மக்கள் உயிர் தப்பினால் போதும் என்று, கடையை விட்டு ஓடத் தொடங்கினர்.

தனகுப்தனும் கடையை விட்டு ஓடாவிட்டால் நிச்சியம் நெருப்பிற்கு இரையாகி சாவான் என்பது திண்ணம். ஆனால் அதிர்ச்சியுற்ற தனகுப்தன் கடையை விட்டு நகராமல் திகைத்து, மனம் நொந்து அக்கடையிலேயே இருந்தான். இத்தகைய குழப்பத்தில் தனகுப்தன் இருக்கும்போது, திடீரென்று அவனது நடுங்கும் கரங்கள் கடையில் குமாரியால் மறந்துபோய் விடப்பட்டிருந்த ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் விரதப் பிரசாதத்தின் மீதுபட்டது. மனம் குழம்பி இருந்த தனகுப்தன், தான் செய்யும் செயலை உணராது, அதைச் சாப்பிடவும் செய்தான். பிரசாதத்தின் இனிப்பான சுவையும் இரசித்தான். அதுமட்டும் அல்லாமல் அவன் மனதில் பெரும்சாந்தி ஏற்பட்டதையும் உணர்ந்தான். என்ன அதிசயம்! என்ன அற்புதம்! பெரும்நெருப்பின் வேகம் தணிந்து, ஒரு சிறுதுளி நெருப்புப் பொறியும் தனகுப்தன் கடையை அணுகவில்லை. தனகுப்தன் வாயிலிருந்து ஒரு வார்த்தையும் வெளிவரவில்லை. அவன் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. இதற்கிடையில் தனகுப்தன் மனைவி காந்திமதி, தன் கணவனுடைய கடையிருக்கும் தெருவெங்கும் நெருப்பு பரவிய செய்தி கேட்டு, தன் மகள் குமாரியுடன் கடைக்கு விரைந்தாள். தீயிற்கு இரையாகி பல கடைகள் சாம்பலாயின என்னும் செய்தி கேட்டு அவர்களுக்குப் பயமும் வருத்தமும் மேலிட்டது. ஸ்ரீநிவாச பெருமானே துணை என்று அவன் நாமத்தைத் துதித்துக்கொண்டு இருவரும் அத்தெருவை அடைந்தனர்.

என்னே அதிசயம்! என்னே ஆச்சிரியம்! தனகுப்தன் கடையை ஒரு சிறுதுளி நெருப்பும் அணுகவில்லை. அவனது கடை ஒன்று மட்டும் தீயிற்கு இரையாகாமல் இருந்தது. உடனே குமாரிக்கு விஷயம் புரிந்துவிட்டது. ஸ்ரீ வெங்கடேச விரத பிரசாதத்தைக் கடையிலேயே தான் மறந்து விட்டுவிட்டு வந்த நினைவு வந்தது. தனகுப்தனுக்கும் தான் பொட்டலத்தை அவிழ்த்து உண்டது அந்த ஸ்ரீ வெங்கடேஸ்வர விரதப் பிரசாதமே என்று உணர்ந்தான். குமாரியும் தான் ஸ்ரீ வெங்கடேஸ்வர விரத பூஜைக்குச் சென்றதையும், அங்கு சொல்லப்பட்ட மகிமை மிகுந்த விரதக் கதைகளையும் சொன்னாள்.

தனகுப்தனும் இறைவனது பிரசாதத்தை உண்டதற்கே, இறைவன் அருள்புரிந்து, தனக்கு வரவிருந்த பெரும் இழப்பிலிருந்து தன்னைப் பாதுகாத்தார் என்று சொல்லி, தன்னை மன்னித்து அருளும்படி இறைவனிடம் மன்றாடினான். அன்று மாலை கிராமத்திலிருந்த மக்கள் யாவரையும் வரவழைத்து, நம்பிக்கையோடும் பக்தியோடும் ஸ்ரீ வெங்கடேஸ்வர விரத பூஜையை அனுஷ்டித்து, அனைவருக்கும் பிரசாதத்தை விநியோகம் செய்தான். அந்த

வியாபாரி தனகுப்தன் அன்றிலிருந்து தன் வாழ்நாள் முழுவதும் ஸ்ரீ வேங்கடேஸ்வரரைத் தொழுதும், விரதத்தைக் கடைப்பிடித்தும், கடைசியில் முக்தியும் அடைந்தான்.

கலியுகம் வாழ் மக்களே ! அந்த வெங்கடேசன் அற்புதத்தைப் பார்த்தீர்களா! பிரசாதத்தைப் பெற்றதற்கே தனகுப்தன் எவ்வளவு பெரியகஷ்டத்திலிருந்து காப்பாற்றப்பட்டான். அதனால் பக்த கோடி பெரு மக்களே! நீங்களும் அந்த ஸ்ரீ வேங்கடேஸ்வரர் திருவருளைப் பெற்று வளமோடு வாழ, கடைபிடியுங்கள் ஸ்ரீ வெங்கடேஸ்வர விரதம்! எவன் ஒருவன் உள்ளன்போடு “ஸ்ரீ வெங்கடேஸ்வர விரதம்” செய்கின்றானோ, அந்த ஆன்மீக அன்பனுக்கு எல்லா வளமும் கிட்டும் என்பது நிச்சயம்.

*நான்காம் கதை ஸம்பூர்ணம்.*

கோவிந்தா!கோவிந்தா !கோவிந்தா !

**ஷ்ரிய: காந்தாய கல்யாண நிதயே நிதயேர்த்திநாம் ।**
**ஸ்ரீவேங்கட நிவாஸாய ஸ்ரீ நிவாஸாய மங்களம் ॥**

# விரதம் திருக்கதை :5

## ஸ்ரீ அத்ரி மஹரிஷி அருளிய திருக்கதை

பக்தபெருமக்களே! பூலோக வைகுண்டமே அந்த திருமலா திருப்பதி! திருவேங்கடமலைக்கு ஒப்பான ஒரு புண்ய ஸ்தலம் வேறு ஒன்றும் இவ்வுலகில் இல்லை. திரு.வேங்கடேஸ்வரருக்கு ஒப்பாக எந்த ஒரு தெய்வமும் எப்போதும் இல்லை. ஸ்ரீமன் நாராயணனின் அவதாரமான ஸ்ரீநிவாச பெருமான் பக்தபெருமக்களிடம் அளவுக்கு மேல் அன்பு கொண்டவர். பக்தர்கள் மீது அவர் காட்டும் அன்பை வார்த்தைகளால் அளவிட்டு சொல்லமுடியாது. அந்த வேங்கடேசன் மீது ஒவ்வொருவரும் முழு நம்பிக்கை வைத்து, எந்நேரமும் அந்த பகவானிடம் தன்னையே அர்ப்பணித்து, நல்ல காரியங்களைச் செய்து கொண்டு, அவரைத் தொழுதால் சகலவித செளபாக்யங்களும் அவர்களுக்குக் கிட்டும். பக்தர்களே! அந்த ஸ்ரீ வெங்கடேச பெருமானின் அருளைப் பெறுவதற்கான சுலபமான சிறந்த வழி ஸ்ரீ வெங்கடேஸ்வர விரதமே.

பெருமைமிகுந்த அத்ரி மஹரிஷியின் கருணையினால் இக்கதை சொல்லப்படுகிறது .

ஸ்ரீநிவாசரிடம் அன்புகொண்ட பக்த பெருமக்களே ! நீங்கள் யாவரும் எத்தனைப் பெரும் அதிஷ்டசாலிகள் என்று வார்த்தைகளால் அளவிட்டு சொல்லமுடியாது. க்ருத, த்ரேத, த்வாபர யுககாலங்களில், பக்தி த்யாகத்தில் தம்மையே அர்ப்பணித்துத் தொழுத பக்தர்கள் யாவரும், ஸ்ரீநிவாச பெருமானின் விருப்பத்தைப் பூர்த்தி செய்தவர்களா என்று நிச்சியம் சொல்ல முடியாது, அவனை மகிழ்விப்பது அவ்வளவு சுலபமும் அல்ல.

ஆனால் இந்த கலியுகத்தில் அந்த ஸ்ரீநிவாசனின் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய, அந்த பகவானின் திருநாமம் ஒன்று மட்டுமே நாவினிக்க போற்றினால் போதும். அதனால் பக்த கோடி மக்களே, ஸ்ரீநிவாச பெருமான் கரம் கொடுத்து நம்மை அரவணைத்திட, தினமும் அவன் திருநாமத்தைச் சொல்லி, அவனது சரணகமலங்களில் அர்ப்பணிக்கும் பணிகளை மட்டுமே நாடுங்கள். தன்னைச் சரணடைந்த பக்தர்களின் கூப்பிட்ட குரலுக்கு, அடுத்த கணமே வந்துநிர்ப்பான் அந்த கருணைக்கடல்.

கருணையின் திருவுரு அல்லவா அந்த திருவேங்கடநாதன்! அவரது புனித அருள் பொங்கிப் பெருகும் இடமும் அந்த திருவேங்கட மலை அல்லவா! அந்த திருவேங்கட மலையில் நீங்கள் அடி எடுத்து வைக்கும் ஒவ்வொரு படிகளும் நீங்கள் செய்த பூர்வஜென்ம புண்ணியங்கள் அல்லவா! முன்னொரு காலத்தில் கௌமார இராஜ்ஜியத்தில் மித்ரா என்ற ஒரு வண்ணான் வாழ்ந்து வந்தான். வண்ணான் தொழிலை அவன் மனமகிழ்வோடு செய்து வந்தான். தன் வருமானத்திற்கு ஏற்ப தானம் செய்து, நற்குணசீலனாய் வாழ்ந்து வந்தான். உடல் ஊனம் உள்ள மித்ரா வாடிக்கையாளர்களது துணி மூட்டைகளை உடல் வருந்திக் கஷ்டப்பட்டு துவைத்தாலும், குறிப்பிட்ட நேரங்களில் அந்தத் துணிகளைக் கொடுக்க முடியாமல் அவதிபட்டுக் கொண்டிருந்தான். அவனது குடும்பம் மிகப் பெரியது. அவனது உழைப்பு இல்லாவிட்டால் அவனும் அவனது குடும்பமும் சாப்பிடக் கூட உணவில்லாமல் பட்டினியால் வாடும். ஆனால், வறுமையின் கொடுமையால் வாடிய மித்ராவிற்கு எப்போதும் அந்த ஸ்ரீநிவாச பெருமான் மீது அளவுக்கு மேல் நம்பிக்கை இருந்தது. நிச்சியம் அந்த ஸ்ரீநிவாச பெருமான் தனக்கு இரக்கம் காட்டுவார் என்ற நம்பிக்கையும் அவனுக்கு இருந்தது. எல்லாம் அறிந்தவர் அல்லவா அந்த ஸ்ரீமன்நாராயணன். அடியார்களது கர்மா முடிவடையும் தருணத்தில், ஏதாவது ஒரு வழியில் அவர்கள் முன் தோன்றி, அவர்களைக் காக்கும் கருணைக்கடல் அல்லவா அந்த ஸ்ரீமன்நாராயணன். ஒருநாள் மாலை, மித்ரா வாடிக்கையாளர்களின் துணிக் குவியல்களை

எடுத்துக்கொண்டு, வழக்கமான துணி துவைக்கும் இடம் சென்றான். மிகுந்த உடல் களைப்போடு இருந்த மித்ரா கஷ்டப்பட்டு துணிகளைத் துவைத்துக் கொண்டு இருக்கும் போது ஒரு வயதான பிராமணரைக் கண்டான். பிராமணர்களைக் கண்டால் எப்போதும் பணிந்து நடக்கும் சுபாவம் உள்ளவன் அந்த மித்ரா. துணிக் குவியல்களைத் தரையில் அப்படியே போட்டுவிட்டு, அந்தப் பிராமணருக்குத் தன் நமஸ்காரத்தைத் தெரிவித்தான்.

அந்த பிராமணர் மித்ராவின் உடல் ஊனத்தையும், அவனது கஷ்டங்களையும் விசாரித்தபின், அவனது கஷ்டங்களை எல்லாம் நினைத்துப் பார்க்கவே தன் மனம் மிக வேதனையாக இருக்கிறது என்று சொன்னார். மேலும் அந்த பிராமணர் மித்ராவைப் பார்த்து "நீ செய்யும் வேலைகள் எல்லாம் ரொம்பவும் கஷ்டம் நிறைந்தது இல்லையா", என்றுகேட்டார். அதற்கு மித்ரா " ஸ்வாமி! நீங்கள் யார் என்று நான் அறியேன். என் கண் பார்வைக்கு நீங்கள் ஒரு புனித புண்ணிய ஆத்மாவாகத் தோன்றுகிறீர்கள். என் குடும்பப் பெரும் பாரத்திலிருந்து நான் தப்பமுடியாமல், என் உடல் ஊனத்தோடு கஷ்டப்பட்டு துணி துவைக்கும் வேலையைச் செய்து கொண்டிருக்கிறேன். ஐயா! என் உடல் ஊனத்திலிருந்தும், என் கஷ்டங்களிலிருந்தும் நான் மீண்டு ஈடேறுவதற்கான வழியைக் காட்டவேண்டும்" என்று பணிவோடு கேட்டான். அதைக் கேட்ட பிராமணர் மித்ராவைப் பார்த்து "அன்பனே! நான் சொல்வதை மிகக் கவனமாகக் கேட்பாய் என்றால் உன் உடல் ஊனமும் நீங்கி, பெருஞ் செல்வமும் பெற்று பெருவாழ்வு வாழ்வாய். நான் சொல்லும் ஸ்ரீ வெங்கடேஸ்வர விரதத்தைக் கடைபிடி. முறைப்படி அந்த விரதத்தைச் செய்து முடித்ததும் உனக்கு ஆயிரம் பொற்காசுகள் உடன் கிட்டும். ஆனால் ஒரு நிபந்தனை. உனக்குக் கிடைக்கும் ஆயிரம் பொற்காசுகளில் சரிபாதி பொற்காசுகளை எனக்கு நீ தரவேண்டும். நாளை இதே நேரத்தில், இதே இடத்தில் உன்னைச் சந்தித்து சரிபாதி பொற்காசுகளைப் பெற்றுக் கொள்கிறேன்" என்று சொன்னார்.

மித்ராவும் அந்த பிராமணரை நமஸ்கரித்து "ஸ்வாமியே! இதைவிட வேறு பெரும் பாக்கியம் ஏது? தயவு செய்து ஸ்ரீ வெங்கடேஸ்வர விரதத்தைப் பற்றி சொல்லுங்கள். தாங்கள் சொல்லும் முறைகளைக் கடைப்பிடித்து, நிச்சியம் அந்த விரதத்தை முடிப்பேன்", என்றுசொன்னான். பிராமணரும் அந்த விரதத்தை கடைப்பிடிக்கும் முறையை விளக்கிச் சொன்னார்.

மித்ரா மன மகிழ்ச்சியோடு வீடு சென்று தன் மனைவியிடம் எல்லா விவரங்களையும் கூறினான். தன் வீட்டை சுற்றியுள்ள மக்கள் யாவரையும் தன் வீட்டிற்கு வரவழைத்து, பக்தி சிரத்தையுடன் ஸ்ரீ வெங்கடேஸ்வர விரதத்தைச் செய்து முடித்து, ஸ்ரீ வெங்கடேஸ்வர விரதத் தீர்த்தத்தையும், பிரசாதத்தையும் தான் முதலில் பெற்றுக் கொண்டு, அங்கு வந்திருந்த அனைவருக்கும் விரதத் தீர்த்தத்தையும், பிரசாதத்தையும் கொடுத்தான். அந்த நேரத்தில் வீட்டிற்கு வெளியில் பெருத்த சப்தங்கள் கேட்டன. மித்ராவின் மகன் வீட்டிற்குள் ஓடோடி வந்து "அப்பா! உம்மைக் காண, நம்மூர் அரசனது பணியாட்கள், நம் வீட்டிற்கு முன் நிற்கிறார்கள். நம்மூர் அரசன் எக்கச்சக்கமான வெகுமதிகளை அனுப்பியுள்ளார்", என்று சொன்னான். அரசனது பணியாட்கள் மித்ராவை அணுகி பின்வருமாறு சொன்னார்கள். "மித்ரா! அரசாங்கத்தில் வண்ணான் பணி செய்ய, அரசன் தங்களை நியமனம் செய்துள்ளார். அதற்குப் பரிசாக ஆயிரம் பொற்காசுகளை அனுப்பியுள்ளார்", என்று சொல்லி அந்த பொற்காசுகளை அவனிடம் தந்தனர்.

மித்ரா எல்லையில்லா மகிழ்ச்சிக் கடலில் திளைத்தான். அரசனது பணியாட்கள் மித்ராவிடம் இன்னும் ஒரு வாரத்தில் அரசாங்கப் பணியில் சேரவேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் மித்ராவிற்கு ஒருவாரம் வரை தாமதம் செய்ய இஷ்டமில்லை. அரசாங்க பணியில் உடனே சேருவதற்கு நினைத்து, அடுத்த நாளே பயணத்திற்கான சாமான்களை மூட்டைக் கட்டிக்கொண்டு புறப்பட்டு, விடியற்காலைபொழுது அரண்மனையை அடைந்தான்.

அவனோட அளவற்ற மகிழ்ச்சியால் அந்த வயதான பிராமணரை மறந்தான். அரண்மனைக்கு வரும் வழியில்அந்த வயதான பிராமணரின் நினைப்பு வந்தாலும், அதை அலட்சியம் செய்து, ஒரு மாதம் கழித்த பின் அந்த வயதான பிராமணரைப் பார்த்துக் கொள்ளலாம் என்று நினைத்தான்.

அரண்மனையை அடைந்த பின் தன் வேலைகளைச் செய்யத் தொடங்கினான். பல மாதங்கள் கடந்தன. மித்ரா அந்த பிராமணரையும் மறந்தது போய், அவருக்குக் கொடுத்த வாக்குறுதியும் முற்றிலும் மறந்துவிட்டான். பிராமணர் வடிவில் வந்த ஸ்ரீநிவாசரை மித்ரா உணரவில்லை. பதவி வந்ததும் அலட்சியம் செய்வது மானிட ஜாதியின் இயற்கைக் குணம் என்பதை ஸ்ரீநிவாசரும் அறிவார். அதனால் அந்த மித்ராவிற்கு நல்ல ஒரு பாடம் கற்பிக்க வேண்டும் என்று முடிவு பண்ணினார். அடுத்தநாள் காலை அரண்மனையில் அரசியின் நகைகளைக் காணாமல் போகச் செய்தார். அந்த பழி மித்ராவின் மீது சுமத்தப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டான். பலவழிகளில் மித்ரா தண்டிக்கப்பட்டான். மித்ராவும் தன் மீது ஏன் இந்த பழி சுமத்தப்பட்டது? எதற்காக தனக்கு இத்தகைய தண்டனைக் கிடைத்தது? என்று ஆலோசிக்கத் தொடங்கினான்.

அன்று இரவு மித்ராவின் கனவில் ஸ்ரீநிவாசர் வயதான பிராமணர் வடிவில் வந்து தோன்றி, முன்னர் பிராமணராக அவன் முன் தோன்றியது இறைவன் என்று உணர்த்தி, மேலும் மித்ரா அந்த பிராமணரிடம் கொடுத்த வாக்கைத் தவறியதால் அவனுக்கு இத்தண்டனை ஏற்பட்டது என்று சொன்னார். அதைக் கேட்டதும் மித்ரா ஸ்ரீநிவாசருக்குத் தன் பிராத்தனையைச் செலுத்தி, “இறைவா! நான் ஒரு பெரும் பாவி. பெரும் குற்றம்செய்த இந்த குற்றவாளியை மன்னித்தருள்வாய். இன்று முதல் ஒவ்வொரு மாதமும் நான் ஸ்ரீ வெங்கடேஸ்வர விரதத்தைப் பக்தி சிரத்தையுடன் கடைபிடித்து, எனது வாழ்நாள் இறுதிவரை, எனது பாதி வருமானத்தை உமக்கே அர்ப்பணம் செய்கிறேன்”, என்று வேண்டினான். பக்தர்களின் பாதுகாவலன் அல்லவா அந்த ஸ்ரீநிவாசர். மித்ராவின் வார்த்தைகளால் ஸ்ரீநிவாசர் மனம் குளிர்ந்து, உளம் கனிந்தார். அடுத்தநாள் அரண்மனையில் அரசியின் நகை ஆபரணங்கள் யாவும் மற்றொரு இடத்தில் இருப்பதைக் கண்டுபிடித்தனர். அரசனும் மித்ரா திருடன் இல்லை என்று அறிந்து, சேவர்களுக்குக் கட்டளையைப் பிறப்பித்து, மித்ராவைச் சிறையிலிருந்து விடுவித்தார்.

அன்று முதல் ஒவ்வொரு மாதமும் மித்ரா ஸ்ரீ வெங்கடேஸ்வரர் விரதத்தைக் கடைப்பிடித்து, எல்லாம் வல்ல பெருமானுக்குத் தன் வருமானத்தின் பாதித் தொகையைக் காணிக்கையாகச் செலுத்தினார். ஸ்ரீநிவாசரின் அனுக்ரகத்தால் ஆனந்த வாழ்க்கையை அனுபவித்து, முக்தியும் அடைந்தார்.

ஸ்ரீநிவாசரின் அருளுக்கு ஏங்கும் பக்த கோடி மக்களே! ஒரு போதும் வாக்கு தவறாதீர்கள். ஒரு போதும் பிராத்தனை வேண்டுதல்களை மறவாதீர்கள். பக்த ஜனங்களே ! நாம் அனைவரும் சகலவித சௌபாக்யங்களைப் பெற்றுவதற்கும், நமது வாழ்வில் ஆனந்தம் மலர்வதற்கும், நாம் அனைவரும் நல்முக்தியை அடைவதற்குமான சிறந்த வழி அந்த ஸ்ரீ வெங்கடேஸ்வர விரதமே. நாம் அனைவரும் இந்த ஸ்ரீ வெங்கடேஸ்வர விரதத்தை அனுஷ்டித்து மகிழ்வோடு அந்த வைகுந்தனின் பாதகமலங்களை அடைவோமாக!

ஐந்தாம் கதை ஸம்பூர்ணம்.
கோவிந்தா ! கோவிந்தா ! கோவிந்தா !
**ஷ்ரிய: காந்தாய கல்யாண நிதயே நிதயேர்த்திநாம் ।**
**ஸ்ரீவேங்கட நிவாஸாய ஸ்ரீ நிவாஸாய மங்களம் ॥**
**ஓம் நமோ வெங்கடேசாய நம :।**
**எல்லாம் ஸ்ரீ வெங்கடேச பெருமாளுக்கே அர்ப்பணம் ।**

**சுபமஸ்து**

## பிரதக்ஷிண நமஸ்காரம்

**ஸ்லோகம்**
**யாநி காநி ச பாபாநி ஜன்மாந்தர க்ருதானி ச ।**
**தாநி தாநி ப்ரணச்யந்தி பிரதக்ஷிண பதே பதே ॥**
**பாபோஹம் பாபகர்மாஹம் பாபாத்மா பாபஸம்பவ: ।**
**த்ராஹிமாம் க்ருபமயா தேவ ஸரணாகதவத்ஸல ॥**
**அந்யதா ஸரணம் நாஸ்தி த்வமேவ ஸரணம் மம ।**
**தஸ்மாத் காருண்ய பாவ்வேண ரக்ஷரக்ஷ ஜனார்தன ।**
ஸ்ரீ லக்ஷ்மி பத்மாவதி ஸமேத ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸ்வாமினே நம: ஆத்மபிரதக்ஷிண நமஸ்காறான் ஸமர்ப்பயாமி ।

(நின்ற இடத்திலேயே இந்த மந்திரம் சொல்லி மூன்று முறை பிரதட்சிணம் செய்துவிட்டு சாஷ்ட்டாங்க நமஸ்காரம் செய்யவும்.)

## ராஜோபசாரங்கள்

**சத்ரம் தாரயாமி । சாமரம் வீஜயாமி । நிருத்யம் தர்ஷயாமி । கீதம் ஷ்ராவயாமி । வாத்யம் கோஷயாமி । ஆன்தோலிகான் ஆரோஹயாமி । அஷ்வானாரோஹ யாமி கஜானாரோஹயாமி । ஸமஸ்த ராஜோபசார , ஷக்த்யுபசார , யந்த்ரோபசார , தேவோபசார , ஸர்வோபச்சர பூஜாம் ஸமர்ப்பயாமி ॥**
**க்ஷமார்ப்பணம்**
**மந்த்ரஹீநம் க்ரியாஹீநம் பக்திஹீநம் ஜனார்தன ।**
**யத்பூஜிதம் மயா தேவ பரிபூர்ணம் ததஸ்துதே ॥**
(நமஸ்காரம் செய்யவும்.)

**அனயா த்யானாவாஹனாதி ஷோடசோஷபசார பூஜயா ச பகவான் ஸர்வாத்மக:**
ஸ்ரீ லக்ஷ்மி பத்மாவதி ஸமேத ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸ்வரூபோ பகவான் ஸுப்ரீத ஸுப்ரஸன்னோ வரதோ பவது ஸ்ரீ வெங்கடேஸ்வர தேவ ப்ரஸாதம் ஷிரஸா க்ருஹ்ணாமி ।
(தீர்த்தம் எடுத்துக்கொள்ளவும்.)

**அகால ம்ருத்யுஹரணம் ஸர்வவ்யாதி நிவாரணம் ।**
**ஸர்வ பாபக்ஷயகரம் தேவ பாதோதகம் பாவனம் ஷுபம் ॥**
(தீர்த்தத்தை தானும் உட்கொண்டு மற்றவர்களுக்கும் கொடுக்கவும்.)

# நைவேத்யம்

**ஓம் பூர்புவஸ்ஸுவ: தத்ஸவிதுர்வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி தியோ யோ ந: ப்ரசோதயாத், ஸத்யம் த்வர்த்தேன பரிஷிஞ்சாமி, அம்ருதமஸ்து அம்ருதோபஸ்தரணமஸி, ஓம் பிராணாய ஸ்வாஹா, ஓம் அபானாய ஸ்வாஹா, ஓம் வ்யானாய ஸ்வாஹா, ஓம் உதானாய ஸ்வாஹா, ஓம் ஸமானாய ஸ்வாஹா, ஓம் ப்ரஹ்மணே ஸ்வாஹா,**
ஸ்ரீ லக்ஷ்மி பத்மாவதி ஸமேத ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸ்வாமினே நம:
மஹா நைவேத்யம் ஸமர்ப்பயாமி ।

**அம்ருதாபிதாநமஸி உத்தராபோஷனம் ஸமர்ப்பயாமி, ஹஸ்தௌ பிரக்ஷாலயாமி ,பாதௌ பிரக்ஷாலயாமி, ஷுத்த ஆசமனீயம் ஸமர்ப்பயாமி தாம்பூலம் ஸமர்ப்பயாமி , ஸுவர்ண மந்த்ரபுஷ்பம் ஸமர்ப்பயாமி, பிரதக்ஷிண நமஸ்காரான் ஸமர்ப்பயாமி, அனயா த்யானா வாஹனாதி ஷோடசோபசார பூஜையா பகவான் ஸர்வாத்மக:**
ஸ்ரீ லக்ஷ்மி பத்மாவதி ஸமேத வெங்கடேஸ்வர ஸ்வாமி ஸுப்ரீத ஸுப்ரசன்னோ வரதோ பவது,

ஸ்ரீ லக்ஷ்மி பத்மாவதி ஸமேத வெங்கடேஸ்வர ஸ்வாமி ப்ரஸாதம் ஷிரசா க்ருஹ்ணாமி ।

# உத்வாஸனம்

**யஜ்ஞேன யஜ்ஞ மயஜந்த தேவா: தானி தர்மாணி ப்ரதமான்யாஸன் ।**
**தேஹனாகம் மஹிமான: ஸசந்தே யத்ர பூர்வே ஸாத்யா: ஸந்தி தேவா: ॥**
**கச்ச கச்ச ஷுரஷ்ரேஷ் ட ஸ்வஸ்தான ஸ்ரீ வெங்கடேஸ்வர ।**
**பக்தாபீஷ்ட ஸம்ருத்யர்தம் புனராகமனாய ச ॥**
ஸ்ரீ லக்ஷ்மி பத்மாவதி ஸமேத ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸ்வாமி யதாஸ்தானம் உத்வாஸயாமி ।

(மங்கள ஆரத்தி காட்டவும்.)

**ஓம் இதி ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸ்வாமி விரதம் ஸம்பூர்ணம்.**



September 13, 2010




September 18, 2010



September 18, 2010



September 20, 2010



September 20, 2010



September 21, 2010



September 26, 2010



October 10, 2010

அருள்மிகு ஏழுமலையான் அற்புதங்கள்

ஸ்ரீ வெங்கடேஸ்வர விரதம்



**Trabuco Canyon, California - 92679 - U.S.A**

**email : info@lordbalajimiracles.com**

**website : www.lordbalajimiracles.com**

**www.facebook.com/lordbalajimiracles**

**Phone : (001) 9494593679**